Mr. S. Kandiah, Works & Buildings P. W.D., is blessed with a daughter.

Mr. P. Kumarasamy, P.W.D., Town Office, is blessed with a son.

Mr. P. Kandiah of Health Office has left for Ceylon on a short holiday.

Mr. A. Saravanamuthu of the Divisional Superintendent's Office, F.M.S. Railways, has returned from leave with his wife.

Mr. R. Somaskanthakurukal of the Sri Kandaswamy Temple, Scott Road, has proceeded to Ceylon on a short holiday.

Mr. N. Mylvaganam of the Scott Road

area who is a member of the Central Committee has been awarded a fountain pen by the President of the Society for enrolling the highest number of members.

Mr. S.K. Nagalingam, Banker, Kuala Lumpur, has been appointed a licensed Auctioner for the State of Selangor. We wish Mr. Nagalingam all success.

Mrs. S. Thuraisamy, wife of Mr. S. Thurisamy of the Co-operative Department and until recently District Secretary of the Brickfields area, J.C.S. Ltd., has given birth to a daughter.

Mr. M.A. Nagalingam who recently spent his leave in Ceylon married the sister of Mr. V. Rajah of the Clive Institution, Rawang. He has returned with his wife and resumed duty at the Prince of Wales Institution. Mr. Nagalingam, before he left for Ceylon, served for a long time at the J.C.S. Brickfields District Committee.

There was a large gathering of parents and members at the Vivekananda Tamil School for the presentation of certificates to the successful candidates at the recent examination by the Sangeetha Abivirithi Sabah, Kuala Lumpur. The presentation was made by Mrs. A.E. Duraisamy, wife of Dr. A.E. Duraisamy, the president of the Sabha. Tea preceded the presentation. The gathering was later entertained to selected pieces of music by the students of the Sabha.

The 76th Birthday anniversary celebrations of Swami Vivekananda was celebrated at the Vivekananda Ashrama, Kuala Lumpur on 6.2.38. In the morning there was Pooja and Bajanai. From 4 to 6 p.m. music was rendered by the Chums' Amateur Dramatic Association and the Sangeetha Abivirithi Sabha.

Lectures on the life and teachings of Swami Rama Krishna were delievered by Mr. K. Kandiah (English), Mr. S. Palanivelpillai (Tamil), and Sardar Heera Singhji "Dard" (Hindi) under the presidentship of Dr. A. Viswalingam.

Before the lecture Mrs. A. Viswalingam wife of Dr. A. Viswalingam distributed the prizes to the successful students in the Religious Examination held recently under the auspices of the Vivekananda Ashrama.

Mr. C. Krishner, Works & Buildings, P.W.D., has proceeded on leave with his family to Ceylon. He rendered very valuable service to the J.C.S. Ltd., as District Secretary and as member of the District Committee since the inception of the District Committee.

To Mrs. Nagalingam, wife of Mr. S. Nagalingam of the Traffic Office, Police Dept., Kuala Lumpur, a daughter. Both doing well.

Mr. A. Ratnasingam has been transferred to the Office of the Senior Deputy Commissioner of Customs & Excise, Kuala Lumpur from Raub.

Mr. A. Visuvalingam of the Printing Dept., who was on furlough in Ceylon, has returned with his wife.

Mr. K. Chelliah, Audit Office, Headquarters, has been transferred as Clerk in Charge of the Branch Audit Office, Railways.

Mr. S. Sivapathasuntharam, B.A. (Hon: English) London is on a holiday and is staying with his brother Mr. S. Kandiah of the Estate Duty Office, Kuala Lumpur. He is the first Tamil to have obtained this distinction. He is a visiting lecturer of the University College, Colombo. He has been granted the Government Arts Scholarship, tenable for 3 years, and will be proceeding to the University of Cambridge, in July, 1938 to further prosecute his studies.

We record with profound sorrow the untimely death of Mrs. Josiah, wife of Mr. A. H. C. Josiah, Cashier, Oriental Government Security Life Assurance Co., Ltd., Kuala Lumpur, on 28. 2. 1938. Our heartfelt sympathies to Mr. Josiah and the family

The death occurred at Nallur, Jaffna, on 4th March 1938 of Mr. K.K. Sundrampillai. He leaves behind his wife, one sister (Mrs. K. Arumugam of Taiping) and two brother (Messrs K. Chelliah retired Station Master, Kajang and K. Sinnadurai of the Railway C.-operative Society Ltd.,) to

mourn his loss.

The Selangor Ceylon Tamils Association, Kuala Lumpur, entertained Mr. S. Kandiah, M. C. H. at an "At Home" at the Association premises on 26. 1. 38. at 5 p.m. in honour of the presentation to him of the Malayan Certificate of Honour by His Excellency the Governor.

On arrival Mr. Kandiah was garlanded and a group photo was taken, having Mr. Kandiah as the central figure. Photo over, the gathering sat for tea and the pleasant function came to a close at a little before 7 p.m.

Banting.

Mr. V. Thambiah, P.W.D. Kuala Lan gat, has returned from long leave with his family and is posted at Batu Laut.

Mr. S. Nallatamby, Hospital Assistant, Gr. 1, from District Hospital, Klang, is transferred to the town Dispensary, Telok Datoh.

Mr. A. Kanapathipillai, Overseer, P. W. D. Kuala Langat, retired from service from 1. 2. 38 inclusive on reaching the age limit.

SEREMBAN.

Mr. G.G. Ponnampalam, M.S.C., Ceylon Government Representative at the official opening of King George VI Graving Dock at Singapore, was entertained at a tea-party by the Ceylon Tamils of Negri Sembilan at the Vivekananda Students' Hall Seremban, on the 20th February, 1938. Mr. Ponnampalam who was introduced to everyone present at the party made a short speech on "Present day Conditions in Ceylon". The speaker after giving a brief but clear picture of the general conditions prevailing in Ceylon, inter alia the minority question, stressed the importance and the necessity of the Jaffnese returning to Ceylon on reaching their retiring age, if possible earlier, to render some useful service for their motherland and give the benefit of their experience gained in this country by coming in contact with the different nationalities. This view point is all the more interesting in view of the advocacy by certain section of the Jaffnese community for Malayan Domicile.

Mr. K. Sivapiragasam and Mr. V. Mailvaganam have joined the Clerical Service and are posted to the P.W.D. and the Secretariat respectively.

Mr. A. Eliathamby, contractor, has received a cable from Ceylon intimating the death of his mother at Chunnakam, Jaffna. Our sympathies for the bereaved family.

PERAK,—Taiping.

Mr. V. Ratnam of District Hospital, Parit Buntar has been transferred to Central Medical Store, Taping, in place of Mr. Mun Fook, Clerk Class II, who has gone to Hospital, Parit Buntar, as clerk and steward.

Mr. T. Murugapillai, Senior Hospital Assistant, District Hospital, Parit Buntar has gone to Taiping Hospital on transfer.

Messrs. Sabapathy and Selvadurai have resumed duty at the District Hospital, Parit Buntar, after returning from Ceylon on long leave.

Mr. S. Suntherarajah, son of late Suppiah, C. C., S.M. & H.O. Office, Perak, has been employed as a state clerical clerk in the Sanitary Board, Taiping.

Mr. N. Selvadurai has been employed as a state clerical clerk in the Registry Office, Taiping.

Dr. R. Sathiah has been appointed as an Assistant Medical Officer in the Lumut Hospital from 15th February.

Mr. N. Eliathamby, J.P., is an inmate of the General Hospital, Taiping.

Regret to hear the death of Mr. N. Ganapathipillai in Jaffna who was a well known planter and conductor in Lumut and Sitiawan.

Mr. Arulanandam, clerk F.M.S.R. has come to Taiping as chef goods clerk in place of Mr. Thamiah who has gone to Ceylon on leave.

„	M. Kathiravelu	Benting	2.00
„	K. Rajaretnam	K. Lumpur, part payment	5.00
„	M. Vallipuram	„ „	10.00
„	M. Kandiah	„ „	5.00
„	K. Kandiah	„ „	20.00
„	S. Vijayandram	„ „	10.00
Dr.	S. Sanmugam	„ „	10.00
„	C. Nadarajah	„ „	10.00
Mr.	M. Ehambaram	„ „	10.00
„	C.S. Arunasalam	„ „	10.00
„	A. Kathiravelu		10.00
„	T. Saravanamuthu		2.00
Dr.	V.J. Seevaretnam	Kajang part payment	25.00
Mr.	V.S. Ponnampalam	„	10.00
„	S. Eliathamby	„	10.00
„	S.K. Ponniah	„	5.00
„	A. Arumugam	K. Lumpur part payment	2.00
„	K. Kanagasabai	„ „	10.00
„	S. Chittampalam	„ „	5.00
„	K. Veluppillai	Bentong	5.00
„	M. Kanagasabai	Ipoh	5.00
„	S. Sinnathamby	„ part payment	20.00
„	N. Krishnar	„	20.00
„	S. Murugasu	„	5.00
„	K. Thambiayah	„	10.00
„	S. Saminathan	„	10.00
„	S.M. Muthuthamby	„	10.00
„	S.T. Thambiayah	„	10.00
„	T. Kandiah	„ part payment	10.00
„	A. Veluppillai	Batu Gajah	10.00
„	V. Arunasalam	„	5.00
„	A. Kandavanam	„	5.00
„	T.R. Sundram	„	7.00
„	S. Krishnapillay	Tanjong Rambutan	20.00
Dr.	P. Varatharajah	„ part payment	10.00
Mr.	V. Kasimir	„ „	5.00
„	K. Chelliah	Kuala Kangsar	10.00
Mr.	A. Vairamuthu	Kuala Kangsar	10.00
„	S. Kandappu	„	50.00
„	J.V. Muthiah	„	50.00
„	S. Elaguppillai	Taiping	15.00
„	K. Muthiah	„	3.00
„	K. Arumugam	„	5.00
„	N. Thuriappah	„	10.00
„	V. Veerasingam	„ part payment	5.00
„	S. Ayathurai	„ „	10.00
„	S. Thamboo	„	10.00
„	A. D. Pillai	„ part payment	5.00
„	A. Thambipillay	„	25.00
„	S. Ponniah	„	10.00
„	K. Paramoo	„	5.00
„	C. Veluppillai	„	5.00
„	S. Veluppillai	„	5,00
„	M.S. Thillyampalam	„	5.00
„	A. Rasiah	„ part payment	10.00
„	T. Murugapillay	„ „	5.00
„	K. Subramaniam	„ „	5.00
„	P. Thambyah	„ „	45.00
„	A.S. Kathiramer	Selama	5.00
„	A. Visvanather	Bagan Serai	5.00
„	V. Kandiah	Parit Buntar	5.00
„	M. Eliathamby	„	5.00
„	S. Viswalingam	„	5.00
„	K. Ampikaipakar	„	5.00
„	S. Kandiah	Bukit Mertajam	5.00
„	T. Murugasu	Kuala Lumpur	10.00
„	R. Somasundram	„	5.00
„	V. Visvalingam	„	10.00
„	S. Kandiah	„	3.00
„	R. Sinnathurai	„	5.00
„	R. Sinnathurai	„	5.00
„	K. A. Chellathury	„	5.00
			$5,428.50

(*Continued from page 15.*)

us today is: What will the next war do? Will it not destroy civilisation itself? Will it not plunge the world into a state of re-barbarisation, or will it be the harbinger of a new civilisation founded on ideals which possibly we might despise today? Of other things he does not discuss, but of the future of marriage, he expresses views which may not possibly gain acceptance from a great many of us. "At the present time we are faced with nothing more or less than a common cultural episode. Those who advocate freer intercourse, who excuse a submission to impulse, who praise mistresses and belittle wives, who chafe at control and authority, are merely in the grip of those forces which dictate the life of a culture. They have nothing new to say and they are themselves the mouthpiece of time. If it is permis-

sible to prophesy from analogy, it is certain that *marriage customs in the white civilisation will, with the passing of the years become looser and looser.* And those who, whatever their motive, struggle against such advance, are doomed to see their efforts end in failure".

I refer to this point of view, so well and effectively expressed, to point out to our would-be reformers, the great difficulties they will have to contend with. Not merely old customs hallowed by usage and tradition, but also the inevitability of historical events will have to be reckoned with. "When therefore the problem of marriage is being treated, the question which arises, is nothing more or less than social evolution itself". You cannot therefore touch the question of dowry without intruding into the regions of marriage, and this will again involve us in wider issues.

The position of *our* women is not altogether on quite the same footing as the position of women in the West. Our women have not set forth to invade the factory nor the office; their ambitions lie in the hearths and the homes——their ideals are Sita and Savitri, to be dutiful wives and good mothers. What have they to look up to for support in old age? Old-age pensions as in some countries in the West? "Tis a consummation devoutly to be wished." Or can they rest secure in the savings they have hoarded while in employment either as manual or mental workers? Such hope cannot be theirs. Wisely, as a result perhaps of years of experience, it was decreed that a woman embarking on the noble career of motherhood, should do so with a dowry suitable to her station in life, so that she would not be stranded and left to the tender mercies "of men fiercer than wolves". Very rarely does a mother spend extravagantly. Her natural instinct of motherhood will demand that she should save and put by for the day when she might be bereft of "husband father and lord".

THE BANK OF MALAYA LIMITED,

INCORPORATED IN F.M.S.

Registered Office:—
No. 2, Foch Avenue,
TELE{PHONE: 3346,
GRAM "PEOPLEBANK"
KUALA LUMPUR.

Branches & Agencies :
COLOMBO, JAFFNA,
KLANG, SEREMBAN, IPOH

CURRENT ACCOUNT and SAVING FUND ACCOUNTS opened: FIXED DEPOSITS received :-Terms which are libaral may be ascertained on application.

Drafts granted upon and Bill negotiated and collected at JAFFNA and at any of the BRANCHES and AGENCIES.

பாங்க் ஒவ் மலாயா லிமிட்டட்

மலாய் நாட்டில் வசிக்கும் இந்தியா-இலங்கை வாசிகளின் வசதிக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிற இவ்வங்கியில்:—

மிகவும் சொற்ப தொகையுடன் கணக்குத் தொடர்ந்து செக்குவெட்டவோ,
நியாயமான பொறுப்புடன் கொடுக்கல் வாங்கல் செய்யவோ,
இந்திய இலங்கை ஆகிய இடங்களுக்கு சமமான விலைக்கு உண்டியல்கள் வெட்டவோ,
மாதந்தரம் நடாத்தி வரும் ஏல சீட்டில் பங்குபெறவோ,
நம்மவரின் கைத்தொழில், கமத்தொழில், வியாபாரம் முதலியன விருத்திசெய்வதற்கோ,
அந்தியகால ஆதரவான வாழ்விற்கோ, வேறு பல மனத்தேறுதலுக்கோ இவ்வங்கி உற்ற சிநேகிதனைப்போல உதவிபுரியுமென்பதற்கு, இதில் சேர்ந்து ஒத்துழைத்து பற்றுவரவு செய்துவரும் பல்லாயிரம் கண்பர்கள் அத்தாட்சியாயிருப்பதை உள்ளங்கை நெல்லிக்கனிபோலக் காணலாம்.

கணக்குத் தொடர்ந்துசெக்குவெட்ட விரும்புவோர், விஷயத்தை நேரேவந்து வங்கியின் மானேஜரிடம் எவ்வேளையிலும் பேசிக் கொள்ளலாம்.

D V. KANDIAH, Secretary.

SMART

TAILORING

AT

GIAN SINGH'S.

Get Your suits and Shirts

Made by Our Experienced

CEYLONESE CUTTER

WE GUARANTEE SATISFACTION

GIAN SINGH & Co.,

KUALA LUMPUR.

O. S. K. LINE

DIRECT SERVICES FROM SINGAPORE TO

COLOMBO

[EAST AND SOUTH AFRICA AND SOUTH AMERICA]

Passage Fares (minimum) to COLOMBO :—

First class	.. ..	**$120.00**
Third class	.. .. ..	**$ 49.00**
Third class	.. .. ..	**$ 31.20 (without diet)**
Deck	.. .. ..	**$ 20.00 (-do-)**

NEXT SAILINGS FROM SINGAPORE

S.S. Manila Maru	(10,000 Tons Gross)	March	11,	(Due Colombo	Mar. 16)
M.S. Laplata Maru	(7,300 „)	April	3,	(„ „	Apr. 8)
S.S. Africa Maru	(10,000 „)	April	8,	(„ „	Apr. 13)
M.S. Buenos Aires Maru	(10,000 „)	April	27,	(„ „	May 2)
S.S. Hawaii Maru	(10,000 „)	May	10,	(„ „	May 15)
M.S. Santos Maru	(7,300 „)	Jun.	1,	(„ „	Jun. 6)
S.S. Arizona Maru	(10,000 „)	Jun.	10.	(„ „	Jun. 15)

For further particulars, please apply to:- GUTHRIE & CO., LTD., Agents, K.Lumpur.

or The Globe Travel Service, No. 1, Holland Road, K. Lumpur.

"வழிகாட்டி"

——:o:——

யாழ்ப்பாணத்தவர் ஐக்கிய சங்க சஞ்சிகை.

பொருளடக்கம் பக்கம்

நல்லபிணக்கம் 1

பத்திராதிபர் குறிப்புகள் 3

சரஸ்வதி 5

சரஸ்வதி அல்லது ஊக்கம் உண்டேல் உயர்வை அடையலாம் 9

தமிழ் மொழி 12

நன்மதி 16

கடவுள் வணக்கம் 18

தமிழ் இலக்கண நூல்கள் 21

முன்னேற்றம் 23

மதுபானம்... 24

கடிதம்—விகடம் 26

முருகன் அடியவர்க்கு அறிவித்தல் 27

விவேகானந்த ஆச்சிரமம் 27

"வழி காட்டி"

யாழ்ப்பாணத்தவர் ஐக்கிய சங்க முன்னேற்ற உயரிய மாதப்பத்திரிகை.

மலர் க.	ஈசுர-ஆண்டு, பங்குனித்-திங்கள்.	இதழ் ஆ

ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு—நம்மில்
ஒற்றுமை நீங்கிலனைவர்க்கும் தாழ்வு.

: நல்லாரிணக்கம் :

——:o:——

நல்லாரிணக்க மென்பது, நல்லார்—உத்தமர், அறிஞர். இணக்கம்—சேர்மானம், கூட்டுறவு. கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்த அறிஞரின் கூட்டுறவு எனப்பொருள்படும்.

"நல்லாரிணக்கமும் நின்பூசை நேசமும் ஞான
யல்லாது வேறு நிலையுளதோ." [முமே

என்று பட்டினத்தடிகளும் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார். அறிவிற் சிறந்த பெரியோரை நட்பினராகக் கொள்ளுதல், உலகில் ஒருவன் அடையும் பேறுகளெல்லாவற்றிலும் அரிய பேறு என்று கூறலாம். இதன் சிறப்பை நோக்கியே தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனாரும்,

"அரிய வற்றுளெல்லாம் அரிதே
பெரியாரைப் பேணித் தமராக் கொளல்"

என்று கூறியிருக்கின்றார்.

"ஒருமையுடனினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர் தம் முறவு வேண்டும்.
உள்ளொன்றுவைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்"

என்று களங்கமில்லா மனதையுடைய பெரியோர் சேர்க்கையைப் பெரிதும் வியந்து பாடியிருக்கின்றனர். அத்தகைய மேன்மையாளரைத் தெரிந்து அவரை அணுகி, அவரிடம் நட்புக்கோரல் வேண்டுமென்பதை உணர்த்தவே "சேரிடமறிந்து சேர்" என்று ஔவைப் பிராட்டியாரும் வெகு அழகாகக் கூறியுள்ளார்.

இப்படியான பெரியோர்களை அணுகி அவருடன் சிநேகமாயிருப்பதால் வரும் நன்மை என்னவெனில்:

"பூவுடன் கூடிய நாரும் புனிதர் முடிக்கணியாகு மாறுபோல்" அப்பெரியாருடைய பெருந்தகையான குணங்கள் அவர்களடி பணிந்தொழுகும் நம்மிடத்திலும் தோற்றப்படும். அவர்களின் சேர்க்கை வாசனையால் அப்பெருந்தகையான குணங்கள் நம்மிடம் தோற்றப்படவே, நம்மிடத்திலுள்ள தீக்குணங்கள் சிறிது சிறிதாக அகன்றுவிடும். எவ்வளவு கல்நெஞ்சராயிருந்த போதிலும், நல்லவர்களின் சேர்க்கையினால், "சந்தன மரத்தைச் சார்ந்த அகில் மரமும் தன் புன்மை நீக்கி மணங்கமழுவது போல்" நல்லவர்களாவார்கள். "ஏறும்பூரக் கல்லும் தேயும்" என்றபடி நல்லோர் செய்கைகளையும், வார்த்தைகளையும், நாளுக்குநாள் பார்த்தும், கேட்டும், வரும் கல்நெஞ்சர் மனமும் கரைந்து பெரியோரைப் போலவே செய்கை செய்யத் தூண்டிவிடும். அதுவும் தவிர மேலோர் தம்மை யடைந்த கீழோரை மனமுவந்து உபசரித்து போதிக்க வேண்டியதைப் போதித்து, ஒழுக்கம் பயிற்றித் தம்மைப் போலவே சீர்மை பெறச்செய்வர். மேலும் நல்லோருடைய சேர்க்கையானது, தன் சமூகத்தில் பக்தியும் தீயோரிடத்துப்பிரிவும், நாவில் சத்திய முமுண்டாக்கி யாவரிடத்தும் நன்மதிப்பைப் பெறவைக்கும். இப்மையில் மட்டுமின்றி மறுமைக்கும் வழிகாட்டியா யிருக்கும்.

"நன்றிக்கு வித்காகும் நல்லொழுக்கம் தீயோ
என்றும் இடும்பை தரும்" [ழுர்கம்

என்பது திருவள்ளுவ நாயனார் வாக்கு. நன்றி என்பது இங்கு தருமத்தை குறிக்கின்றது. நல் லொழுக்கமே சிறந்த அறமாம்.

பிறரை ஏமாற்றும் குணமுடையோர் நற்சக வாசத்தையும், நல்லாரிணக்கத்தையும், கொஞ்ச மும் விரும்பமாட்டார். ஏனெனில் நல்லவரான வர் மற்றவர் முகதாட்சணியத்தைக் கொஞ்சமும் பாராட்டாது ஒருவன் கெட்டவழியில் சென்றால் அவனை நேரிலே கண்டித்து விடுவர். மற்றவரோ எவன் எக்கேடு கெட்டால் எனக்கென்ன என்று மௌனமாயிருந்து விடுவர். ஆனால் அவர் கண் காணு இடத்தில் மட்டும் அவரைத் தூற்றப் பின்னில்லார். இது நாம் மேற்சொல்லிய ஏமாற் றுக் குணமுடையவரிச் காதில் படாததால் இருசாரும் நட்புக் கொள்வர்.

ஆனல் நற்குண முடையவரோ வெனின்,
"கள்ளார்கள் உண்ணார் கடிவகடிந் தொரீஇ
எள்ளிப்பிறரை இகழ்ந்துரையார்—கள்ளியும்
வாயிற் பொய்கூறார் வடுவறு காட்சியார்
சாயின் பரிவதிலர்"

என்றபடி ஒருபோதும் பிறரை இகழ்ந்துரை யார். நேரில் கண்டிப்பதல்லாது கண்காணு இடத்தில் தூற்ற அவர்கள் மனம் ஒருப்படாது. மேலும் நல்லாரிணக்கமானது கரும்பைக் குருத் திலிருந்து தின்றுகொண்டு போவதுபோலிருக்கு மாம். முதலில் அவர்கள் நம்மைக்கண்டித்து நேர்மையாகவே யோசிப்பர். நம் மனம் போன போக்கிற்குப் போகவிடமாட்டார்கள். நாளுக்கு நாள் அவர்கள் குணத்தை யறியும் நமக்கு, கரு ம்பு நுனியிலிருந்து வர வர இனிமையாகிக் கொண்டே போவதுபோல் அப்பெரியோர் நட்பு இன்பம் தரும். கரும்பை அடிப்பாகத்திலிருந்து சாப்பிட்டுக்கொண்டே போனல் நுனிப்பாகம் எப்படி உவர்ப்பாகிக் கொண்டேவருமோ அது போலவே அறிவற்றவரோடு பழகும் சிநேகம் நாள டைவில் வெறுப்பை விளைக்கும்.

"இடம்பட மெய்ஞ்ஞானம் கற்பினும் என்றும்
அடங்காதார் என்றும் அடங்காதார்—தடங்கண்
[ணுப்
உப்பொடு நெய்பால் தயிர்காயம் பெய்திடினும
கைப்பறா பேய் சுரையின் காய்."

என்பது போலும் சில கசடர் உண்டுதான், ஆனால் அவர்கள் மனுஷத்தன்மை வாய்ந்தவர ல்ல. அவர்களை விட்டு சுய அறிவோடு கூடிய மனுஷர் நல்லாரிணக்கத்தினாலும், நற்சங்கங்க ளின் கூட்டுறவாலும், நன்மை யடைவார்களென் பதிலையமில்லை.

ஆனல் நல்லொழுக்கமாய் இருப்பவர்கள் தீயோ ரைப்போல் அவ்வளவு மிக்க ஊதியமும் சுக போகங்களுமனுபவிக்கக் காண்கின்றோமில்லை. ஏனெனில நல்லொழுக்க மூடையவன் உலக விஷயங்களில் சிறிது நஷ்டமும் சரீர கஷ்ட முறுவது சகஜம். பொய்யும் புரட்டுமே அதிகம் பரவி வருவதால் உண்மையே பேசும் நல் லோரை மற்றையோர் நம்புவது அரிது. ஆனல் நல்லொழுக்கம் தீயொழுக்கமிரண்டும் முறையே புண்ணிய பாபங்களை விளைத்து என்று மழியா மோக்ஷ நரகப்பிராப்திகளைச் சித்திக்கச் செய்வதால் நல்லோர் தம் உயிர் நீக்கவரினும் நல் லொழுக்கத்தினின்று பிறழமாட்டார். நல்லொ ழுக்க மார்க்கமானது ஆரம்பத்தில் மிகவும் கரடு முரடானதாய், நெருக்க முள்ளதாய் முட்களும் புதர்களும் நிரம்பியதாய் இருக்கும். ஆனல் உட் புகுந்து செல்லச் செல்லவழிமிக அழகுள்ளதாய் நின்மதியுள்ளதாய் விரிந்து அழிவில்லா அந்த மோட்சவாயிலில் சென்று நிற்கும்.

ஆனல் தீயொழுக்க மார்க்கமோ ஆரம்பத்தில் மிகவுமகன்று விசாலித்ததாயும், அடிவைத்து நட க்க மிக மிருதுவான தாயும் சுற்றிலும் அழகிய கண்காட்சியுள்ளதாயுமிருக்கும். அதையே உண் மையானதென எண்ணி உட்செல்லச் செல்ல வாயில் மிகச் சுருங்கியும் கரடுமுரடுமாய் அசி ங்கமான பொருட்களுடனும் தோன்றி ஈற்றில் நரகம் என்று சொல்லப்படும் ஓர் படுகுழியின் வாசலில் சென்று நிற்கும். சகோதர சகோதரி களே:—

உங்களில் அநேகர் கரடு முரடான பாதை யையே பின்பற்றி நல்லொழுக்கமாக நடந்து உங்களுக்கும் இனசனபந்துக்களுக்கும் என்று மழிபாகீர்த்திபை நிலைநாட்டி மேன்மையாக நட ந்து வருவது நம் சமுகத்தவர் யாவர்க்கும் ஓர் கனிப் பெருமையே. ஆனல் சிலர் விட்டில் பூச் சியைப்போல் அந்தப் பொய்த்தோற்றத்தை நாடிப் போய்க்கொண்டிருக்கிறார்கள். அதோ படுகுழிக் குக் கிட்டச்சென்று விட்டார்கள். அந்தோ! விழு ந்து விடப்போ கிறார்கள்! விரைவில் சென்று இழு த்து வந்து சீரியபாதையில்விடுங்கள், தாமதிக் காதீர்கள்! இயன்றமட்டும் முயன்று பாருங்கள்! அதன்பின் விதிபோல்படியாகட்டும். தாமதித் தீர்களோ நீங்கள் செய்யவேண்டிய கடமையை த்தவற விட்டவர் ஆவீர்கள்! முகதாட்சணியம் வேண்டாம்! செல்லும் பாதை கூடாது என்பதை பயமின்றி அவர்களுக்கு எடுத்துச்சொல்லுங்கள்.

மற்றவர் எப்படியானலுமேக்கென்ன என்ற சுய நலத்துடன் இருந்து விடாதீர்கள். அல்லது போகவிட்டுப் புறங்கூறித் திரியாதீர்கள். நேரில் சென்று அவர்களுக்குப் புத்திபுகட்டுங்கள். முதலில் அவர்கள் உங்கள்மேல் கோபித்தாலும் ஈற்றில் உண்மையை உணர்வார்கள்: சீரிய பாதை இதுவென்பதைச் சுட்டிக்காட்டுங்கள். ஆரம்பத்தில் கரடு முரடாயிருந்தாலும் ஈற்றில் நாகரிகத்திற்கு மென்பதை அறியாதவர்களுக்கு விளக்கவைப்பது அறிவுடையோர் செயல்லவோ?

அதெல்லாம் சரி நம்சங்கமும் மோகூத்திற்கு வழிகாட்டுமோ என்று கேட்டுவிடாதீர்கள் ஆனால் இதுவோ இவ்விடம் வதியும் நம் பிற்சந்ததியாருக்கு ஒரு சிறந்த வழிகாட்டி என்பதற்கையமில்லை. பொய் புரட்டும் ஏமாற்றுக்குணமுமில்லாதவர்களே இதில் அங்கம் வகுத்திருக்கிறார்களென்பதை மிகுந்த பெருமையுடனும் தென்புடனும் நம் சகோதரருக்கு அறிவிக்கிறோம்: எப்படி என்பீர்களோ; முன்சொன்னபடி ஏமாற்றும் குணமுடையவர் மற்றையோருடன் ஒற்றுமைபாயிரார். அத்துடன் இச்சங்கத்தில் யாவரும் நேர்மையானவராய் இருப்பதால் ஏமாற்ற வசதியின்றி விலகிக் கொள்வர். விலகிச் சொல்வதுடனில்லாது தூற்றியும் திரிவர். அவை ஒன்றையும் பொருட்படுத்தாது இவ்வளவு தூரம் மன ஒற்றுமையுடன் தங்கள் சொந்தச் சுகத்தில் அங்கம் வகித்து உதவி செய்து சங்கத்தை மேன்மையுறச் செய்யும் அபிமானிகள் உண்மைத் தேசாபிமானிகளென்பதற்கையமுண்டோ? உண்மைத் தேசாபிமானிகளே மேற் சொல்லப்பட்டகுணங்கள் அணுகுமா? அவர்கள் எப்போதும் "நல்லாரினக்கம்" என்ற சொல்லின் கருத்தை நன்றாக யோசித்து அதை மற்றையோர்க்கும் அறிவிப்பார் என்பதற்கையமில்லை.

நம் வழிகாட்டியின் சற்போதனையால் எத்தனையோ தேசபக்தர்கள் மனக்கிளர்ச்சியுடன் தம் சொந்தச்சங்கமாகிய இச்சங்கத்தில் சேர்ந்து ஒற்றுமையுடன் வேலை செய்து வருகிறார்கள். அவர்களுக்குப் பழைய அங்கத்தவர் நல்லாவகூறி மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்கிறார்கள்.

* பத்திராதிபர் குறிப்புகள் *

சரஸ்வதி அல்லது ஊக்கம் உண்டேல் உயர்வை அடையலாம்.

ஜெகராஜமாணிக்க மணியகாரனது கபடநாடகம் எவ்வளவு தூரம் நிறைவேறுமோ? அப்பெண்ணின் கதியாதாகுமோ? எல்லாம் போகப் போகத் தெரியும்.

நம் ஊரிலிருந்து இவ்விடம் வந்து ஆசை வார்த்தை சொல்லித் தண்டிக்கொண்டு போகிறவர் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போகின்றது. ஊரில் எங்கு குளமோ, கேணியோ, பள்ளிக்கூடமோ, மடமோ, என்ன கட்டத் தொடங்கினாலும், பணம் இவ்விடமிருந்தே போக வேண்டும். இப்படியாக நம் காசு போய்விட்டதாலல்லவா நமக்கென ஓர் சரியான ஸ்தாபனம் இங்கு நியமிக்க இயலவில்லை.

இன்னும் பெற்றோரென்றும் சகோதரரென்றும் அங்கு இருப்பவர்களுக்கு நம் காசு போகப் போக அங்குள்ள இளைஞரெல்லாம் சும்மா இருந்து சாப்பிட்டுவிட்டு வேலையற்றவர்களாய், சோம்பேறிகளாய், களவு, கொலை, முதலிய திருவிளையாடல்கள் நடத்திவருகின்றனர். வேறு உதவியற்றவர்களாய் இருக்கும் இனசனங்களுக்கு அனுப்புவது கூடாதென்று நாம் சொல்வதாக எண்ணவேண்டாம். ஆனால் வீண் டம்பாச்சாரிகளையே நாம் கருதுவது. நம் தாய் நாட்டுப் பத்திரிகைகளைத் திறந்ததும் அங்கே கத்திக்குத்து! இங்கே கொலை! பெண்ணைக்காணவில்லை! தாலிக்கொடிக்களவு! என்பனபோன்ற திடுக்கிடும் செய்திகளே நம் கண்ணுக்குத் தென்படுகின்றது. பத்திரிகைகளில் வெளிவருவது சிலவே. உள்ளூரில் நடப்பதோ மகா பயங்கரம். தலையாரிகள் யாவரும் சேர்ந்துநின்று இப்படியான அட்டூழியக்காரரைக் காட்டிக்கொடுத்தால் தேசம் சுகமமடையாதா? பொதுஜனங்களும் முயற்சியுடன் தலைமைக்காறருடன் ஒற்றுமையாக நின்று அத்திருடரைப் பிடித்துக்கொடுத்து, நியாய ஸ்தலங்களிலும் அவர்களுக்கு ஏற்ற தண்டனை விதித்துவரின், யாவும் ஒழுங்காய் நடக்காதா? வேலியே பயிரைக் காப்பாற்றாவிடில் யாரை நோவது.

* * * *

தமிழ் மொழி.

இப்பூவுலகில் பிறந்துள்ள ஆறறிவுடைய ஜீவராசிகள் தம் கருத்தைப் பிறருக்கு அறிவிப்பத

ற்கு இன்றியமையாத கருவியாயமைந்திருப்பதே பாஷை. தேசங்களோறும் பற்பல பாஷைகள் வழங்கி வருகின்றன. யாவரும் தம் தம் தாய்ப் பாஷையை மிக அபிமானத்துடன் பாவச்செய்து வருகின்றனர். நம் மக்களும் இப்போ தம் தாய்ப் பாஷையில் அபிமானஞ் செலுத்தி மிகுந்த ஊக்கமெடுத்து வருவது தமிழபிமானிகள் யாவர்க்கும் மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது. தன் சொந்த பாஷையைக் கற்றுத் தேறுமலிருப்பவர் மற்றவர் பழிப்புக்காளாவர்

* * * *

நன்மதி.

பெற்றோரால் பெண்களுக்கு அளிக்கப்படும் வித்தியில்லாப் பொக்கிஷம் இப்படியான நன்மதியே. இதைச் சிரமேற்றாங்கி உண்மையுடன் நடந்துவரும் பெண்கள் இம்மையிலும் மறுமையிலும் மேன்மையுற்று விளங்குவதற்கு ஐயமுண்டோ?

* * * *

கடவுள் வணக்கம்.

கருணை நிதியாகிய கடவுளை மனம் வாக்குக் காயத்தினால் வழிபட வேண்டுமென்பதே அறிஞர் கொள்கை. அதாவது மனதினால் தியானித்தும், வாக்கினால் துதித்தலும் உடம்பினால் வணங்குதலுமாம்.

கோளில் பொறியில் குணமிலவே எண் குணத்தான் தாளை வணங்காத்தலை. [தான்

கடவுள் பாதங்களை வணங்காத்தலைகள் பயனற்றவை என்று நாயனாரும் அருளியுள்ளார். அப்படியெல்லாமிருக்க கடவுளை வணங்கக்கூசும் மானிடரின் நாகரீகத்தை எப்படி வர்ணிப்பது. கோயிலுக்குச் செல்லும்போது ஆடவர் எவ்வளவு தூய்மையாகச் செல்கின்றனர். பெண்டிரில் பலர் அப்படிச் சென்றபோதிலும் சிலர் இன்னும் அலங்காரிப்பிற் குறையாதது மிகுந்த வெட்கமான காரியம்.

துக்க வீடுகளுக்கும் அலங்கரித்துக்கொண்டு போவதும் அருவருப்பான பேச்சு வார்த்தைகளுக்கு இடம் கொடுப்பதும் அறிஞரால் வெறுக்கக்கூடிய செய்கைகளே.

* * * *

மதுபானம்

பஞ்சமா பாதகங்களுள் ஒன்றாகிய மதுபானத்திற்கு அடிமையாய், கற்ற அறிவாளிகளும் இருந்து வருவது மகாகேவலம். மதுவுக்கு அடிமையானவர்களுக்கு மனமொழி மெய்கள் தம் வசப்படாமையால் அவர் தம் நாணம் அழியும். நாணம் மட்டுமா! அந்தோ! இருக்க இடமற்றுச் செல்வமழிந்து, உற்றூர் உறவினர் பழிக்க, அயலோர் நகைக்க, மானமிழந்து உயிர் வாழ்கின்றவர் அனேகர். பற்பல நோய்களுக்காளாய் வருந்துவோர் இன்னும் பலர். இதன் தீங்கை உரைக்க முடியுமா? இதற்கு அறிஞரே முன்நின்று உதவி செய்தல் வேண்டும்.

* * * *

பொருட்காட்சி.

சகோதரிகள் பலரின் விருப்பப்படி பொருட்காட்சி வருகிறமாசம் 17-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை வைக்க எண்ணியுள்ளோம். பொருட்கள் அனுப்புபவர்கள் 15-ம் தேதிக்கு முன் எமக்கு அனுப்பிவிடுவது நல்லது. பார்க்க வருபவர்கள் 17-ம் தேதி நாலுமணி தொடங்கி வரலாம். வெளியூர்களிலிருந்து பொருட்கள் அனுப்ப விருப்பமானவர்கள் எங்களுக்கு எழுதி விபரமறியலாம். எல்லாக் கைவேலைகளும் வைக்கப்படும். பன்னவேலை, பூவேலை, பின்னல்வேலை, சங்குவேலை, கராம்பு நெல் முதலியவற்றால் உண்டாக்கியவைகள், ஊறுகாய் வகைகள், இனிப்பு வகைகள், (எல்லாம் வீட்டில் செய்யப்பட்டவை) பலகார வகைகள இன்னும் என்னென்ன கைத்தொழில்களுண்டோ எல்லாம் வைக்கலாம். மற்றதெல்லாம் விபரம் பின்னால் அறிவிப்போம். விருப்பமானவர்கள் ஆயத்தப்படுத்த வேண்டுமென்பதற்கே இதை வெளியிடுகிறோம்

யாழ்ப்பாணத்தவர் யாவர்க்கும் இதில் சேர உரிமையுண்டு. பரிசுகளும் வழங்கப்படும். வைக்கும் பொருளில் தங்கட்கு தேவையானவர்கள் பெயரைமட்டும் எழுதி அனுப்பினால் போதும். விலைக்கு வைக்க விருப்பமானவர்கள் விலையையும் போட்டு அனுப்பவேண்டும்.

———:0:———

சரஸ்வதி

நம் சமூக.....

தீபாவளி நாட்களில் நான் எனது சினேகிதி வீடு சென்றதும், அங்கு நடந்த சம்பாஷணையும் எல்லாம் விபரமாக எழுதியுள்ளேன். கிறிஸ்மஸ் பண்டிகைக்கு அடுத்தநாள் அவளே என் வீட்டுக்கு வந்திருந்தாள், இதற்கிடையில் பள்ளிக் கூட விடுமுறை நாட்களைக் களிக்க போட்டிக்ஸன் போயிருந்தாளானதினால் நாங்கள் சந்திக்கச் சந்தர்ப்பமில்லை.

அவளைக் கண்டதும் நான் "சமுத்திர ஸ்நானம் எப்படி? மழையில்லையா? குளிரில்லையா? என்று பல கேள்விகளை வினவினேன். அதற்கு அவள் எல்லாம் சவுக்கியம்தான். ஆனால் எங்கள் பயண அடுக்குத்தான் பெரிய தொல்லையாச்சே. மறு சாதியாரானால் ஒரு உடுப்புப் பெட்டியுடன் சென்றுவிடுவார்கள். பிரயாணம் அவ்வளவு தொந்தரவாகத் தோற்றாது. நாங்கள் ஊருக்குப் போவது போலத்தான் புறப்பட வேண்டும். இன்னும் ஊருக்காவது இருக்கிற பொருளைக் கட்டிக்கொண்டு புறப்பட்டு விடலாம். இதற்குக் கோப்பித்தூள் மிளகாய்த்தூள் அரிசி மா முதலிய பொருட்களுடன், சாய் கறி கூட வாங்கிக் கட்டிக்கொண்டு போய்விட வேண்டும் என்றாள்.

நான்:—இவையெல்லாம் அங்கு கிடையாதோ?

அவள்:—தூள்கள் வீட்டிலேயே இடித்துப் பாவித்தவர்களுக்கு கடைத்தூள் சரிப்படுமா? அத்துடன் அவ்வூரில் அவை உண்டோ இல்லையோ என்பதுகூட எனக்குத் தெரியாது. ஆனால் காய் கறி எல்லா நாட்களிலும் கிடைப்பதரிது.

நான்:—அப்படியானால் இவ்வளவு கஷ்டமெடுத்து ஏன் அங்கு செல்லவேண்டும்:

அவள்:—போகும்போது இவ்வளவு கஷ்டமானாலும் அங்கு சென்றபின் மனசுக்கு எவ்வளவோ ஆறுதலுண்டு. குழந்தைகளுக்கு வெகு ஆனந்தம். வேலை வேலை என்று மூளையை உடைத்துக் கொள்பவருக்கு சிறிது நாட்களுக்கு நிம்மதியாயிருப்பதே பெரிய ஆறுதலல்லவா?

நான்: இவ்வூரில் யார்தான் வேலை வேலை என்று சொல்லாமலிருக்கிறார்கள். எந்தப் பெண்ணைக் கேட்டாலும். அவருக்கு இப்போ நிரம்பிய வேலை. நேரமோ கிடைக்காது என்கிறாள்.

அவள்:—நாலுமணிக்கே உத்தியோகசாலையால் வீடுவந்து தேநீர் பருகியபின் விளையாட்டு ஸ்தலங்களுக்குச் செல்வதற்கும், சீட்டாடுவதற்கும் நேரம் போதாதவர்களுக்கல்ல, உண்மையில் அல்லும் பகலும் கஷ்டப்படுபவர்க்கே நான் சொன்னது பொருந்தும். வெயிலிலலைந்தவர்க் கன்றோ நிழல்வேண்டும். நிதமும் நிழலிலிருப் பவர்க்கு பிறிதோர் நிழல் அவசியமோ.

நான்:-அதெல்லாம் சரி இவ்வளவு கஷ்டமெடுத்து அங்குபோய் என்ன சுகமெடுப்பீர்கள்.

அவள்:-குழந்தைகள் சந்தோஷமாய் விளையாடுவதைப் பார்ப்பதே ஒரு மகிழ்ச்சி. கடற்கரையில் மணலில் உட்கார்ந்து அகண்டாகாரமான வான வெளியைப்பார்த்துக் கொண்டிருப்பதே ஒரு தனி ஆனந்தம். சூரியன் அஸ்தமிக்கும் காட்சி மனதை அப்படியே கவர்ந்துவிடும். சந்திர வெளிச்சத்தில் கடல் கொந்தளிப்பதும் தண்ணீரின் மினுமினுப்பும் பார்க்கப்பார்க்கத் தெவிட்டாத காட்சி. தண்ணீர் வற்றிவிட்டால் கடலுக்குள் நடந்து திரிவது வேறு சந்தோஷம். (என்று ஏதேதோ இயற்கை வனப்பைப்பற்றி விஸ்தரித்தாள்.)

நான்: ஏது கவியாய் விடுவாய் போலிருக்கிறதே. இயற்கை வனப்பைப்பற்றி இவ்வளவு தூரம் விஸ்தரிக்கிறாய். அங்கு செயற்கை வனப்பு ஏதும் கிடையாதோ?

அவள்: "குருவிக்கேற்ற இராமேஸ்வரம்" என்பார்கள். அதுபோலவே ஊருக்களவான கோயிலும், பள்ளிக்கூடமும், வைத்தியசாலையும் உண்டு.

நான்: கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று படித்தவளல்லவா அதனால் கோயிலையே முதலில் சொல்லிவிடடாய். வேறும் கட்டிடங்கள் இல்லையோ? நம்மவர் அவ்விடம் குடியிருக்கிறார்களா?

அவள்: ஆங்காங்கே தூரத்தில் ஒவ்வோர் பெரிய கட்டிடங்கள் உண்டுதான். ஆனால் கொழும்புக்கடற்கரை முசலியனைபோல் இல்லை. வருஷத்தில் விடுமுறை நாட்களிலெல்லாம் நம்மவரும் மற்றச்சாதியினரும் அங்கு சென்றுதான் வருகிறார்கள். ஆனால் நான் பார்த்த இந்த ஆறு வருஷங்களாக ஆவ்வூர் யாதொரு மாறுதலுமின்றி அப்படியே இருக்கின்றது. என்னவாயிருந்த போதிலும் பொதுவில் சுகத்திற்கேற்ற இடமே. நம்மவரும் அவ்விடம் பல வேலைகளிலும் அமர்ந்திருக்கிறார்கள். ஆனால் எத்தனை பேர் வரையில் இருக்கிறார்களென்பது தெரியாது.

நான்: அப்படியானால் அவர்கள் காய் கறி எங்கு வாங்குகிறார்கள்?

அவள்: அங்கு மச்சம் ஏராளமாகக் கிடைக்கும். சிலர் காய்கறித் தோட்டம் போட்டிருக்கிறார்கள். சிலர் சிறம்பானில் போய் வாங்கி வருவதாகவும் சொல்லுகிறார்கள்.

நான்: அப்படியா சமாச்சாரம். என்னவாயிருந்தாலும் கடலைப் பார்த்துக்கொண்டிருந்தாலே போதும்.

அவள்: இக்கரை மாட்டுக்கு அக்கரைதானே பச்சையாகத்தென்படும். தூர இருக்கும் எங்களுக்குத்தான் சமுத்திரத்தைப் பார்க்கவே ஆனந்தம். ஆனால் அங்கு வசிப்பவர்களுக்கு அது அலுத்துப்போய்விட்டது. அலுப்பு என்பது மனுஷருடன் பிறந்த ஒன்று. நாங்கள் இவ்வூருக்கு வரும்பொருட்டுக் கப்பல் ஏறுகிறோம். மற்ற நாள் கரைமறைந்து விடுகிறது. எங்கும் நாலு பக்கமும் ஒரே சமுத்திரம். அப்போ எங்கள் மனதில் உதிப்பதென்ன நன்றாக யோசித்துப் பார்.

நான்: எப்போ கரைதெரியும் என்று கப்பல் கரையில் நின்று எட்டி எட்டிப்பார்ப்போம். வேறு ஒரு கப்பலைக் கண்டாலே பெரிய ஆனந்தங்கொண்டு யாவர்க்கும் காட்டுவோம். சிறுபிள்ளைகளைப்போல் ஒரு குருவி பறப்பதையும் ஆவலோடு கவனிப்போம்.

அவள்: நன்றாக உற்று யோசிக்குமளவில் சிறு பிள்ளைகளுக்கும் எங்களுக்கும் என்ன வித்தியாசமிருக்கிறது. இவ்வளவு தூரம் உலகத்தில் பிறந்து வளர்ந்து கற்று எல்லாவற்றையும் அனுபவித்தும் சிறுபிள்ளைகளைப்போலவே எங்கள் புத்தி இருப்பது எவ்வளவு கேவலம். இப்படியாகக் குதூகலமாக இருப்பதில் குற்றமில்லை. ஆனால் சிறு குழந்தைகள் அவள் என்னை அப்படிச் சொன்னாள். ஆனதால் நான் இப்படிச் சொன்னேன். அவன அப்படிச் சொல்ல நான் பார்த்திருப்பதா. ஒவ்வொரு குச்சிகளையும் எடுத்துக்கொண்டு பின்னல் ஓடுவதுபோல் பெரியவர்களும் வாது தொடுப்பது நல்லதா பார்.

நான்: மற்றவர் ஒன்று சொன்னால் நாம் கேட்டுக்கொண்டு பேசாமல் இருக்கவேண்டுமென்கிறாயா?

அவள்: பேசாமலிருப்பதே புத்திமானுக்கழகு. அதுவே அவர்களுக்குப் புத்தி போதித்தது போலாகுமே. அப்படி மனம் பொறுத்து இருக்க இயலாவிடில், அவர்களுக்குப் புத்தி வரும்படியாக ஒரு சொல் சொல்லி அவ்வளவுடன் நிறுத்திக்கொள்வதே அறிஞர்க்கழகு.

நான்: ஆண்பிள்ளைகள் என்ன கோபத்தையும் சாதிக்கும் குணம் உள்ளவர்களல்ல. கோபக்காறருடன் சமாளித்துக்கொண்டு விடுவர். ஆனால் பெண்களோ தாங்கள் இன்னாருடன் கோபமென்பதைப் பலரறியக் காட்டவேணுமென்றும், அதனால் தமக்கொரு பெருமை யென்றும் வீண் அகங்காரங் கொண்டவர்கள். கோபத்தை வினைந்து வினைந்து சாதிப்பதும் அவர்களது சுபாவம். எங்கள் வீட்டுக்குப் பக்கலில் ஒரு உபாத்தினிப்பெண் இருக்கிறாள். அவள் எனக்குப் பையன்களேயே படிப்பிக்க விருப்பம் என்பாள். ஏனென்று கேட்டால், பெண்பிள்ளைகளைக் கோபத்தில் ஒரு வார்த்தை சொன்னால் போதும் மூஞ்சியை நீட்டிக்கொண்டு வினை சாதித்துக்கொண்டு இருந்து விடுவார்கள். பையன்களோ அப்படியல்ல. அடித்துவிட்ட போதிலும் சிறிது நேரத்தில் அதை மறந்து விடுவார்கள் என்பாள்.

அவள்: எல்லாரையும் அப்படிச் சொல்லிவிடலாமா. எங்கள் அடுத்த வீட்டுப்பெண் மிகுந்த சாது. அவள் புருஷனே மகாமுரடன். சண்டையானால் 10 நாளைக்கும் அடுத்துப் பட்டினி கிடப்பான். அந்தப் பெண் ஒவ்வொரு நாளும் ஆக்கிவைத்து எத்தனை வினயமாய் வேண்டிக்கொண்டாலும் அசையவே மாட்டான். வெளியில் உத்தியோகசாலைக்குப் போகும் நேரங்களில் அவன் தேநீர் கடைகளில் சாப்பிட்டு விட்டு வீட்டில் வந்து தான் சாப்பிடாதவன்போல் பட்டினிகிடப்பான். அப்பெண்ணும் தன்னைப் போலவே சாப்பிட்டு வருவாளென்றெண்ணினானோ அல்லது அவளைப்பட்டினியே போட வேண்டுமென்றுதானோ இப்படி விசயம் சாதித்து வந்தான், இதையறியாத அப்பெண்ணுக்கு நான் எத்தனை விதமாகச் சொல்லிப்பும் அவள் தண்ணீர் பதார்த்தமொழிய வேறு ஏதும் வாயில்வைக்க மறுத்துவிட்டாள். பாவம் பசியோடும் பட்டினியோடும் சலியாது வேலைசெய்வாள். ஒரு நாள் அவள் புருஷன் கடையில் சாப்பிடுவதை நேரில் பார்த்த என்னாதர் சொன்ன பிறகுதான் சிறிது மனந்தேறிச் சாப்பிட்டாள். ஆண் பெண்ணை சாதிப்பவர்கள் என்பது பார்த்தாயா?

நான்: இருபகுதியிலும் சாதிப்பவர்கள் இருக்கிறார்கள்தான். நல்லவர்களும் உண்டு. எல்லாவற்றையும் சகித்துப் பொறுமையுடன் நடப்பவர் மேலவர். மற்றவர் கீழவரே. இரண்டுப் பக்கமும் சீர்தூக்கிப்பாராமல் ஒருவர் சொல்லையே ஏற்று நியாயம் தீர்ப்பது நியாயமாகாது. கொழுவிக் கொள்வதற்கு இரண்டும் வலுவமாய் இருந்தால்தானே முடியும். ஒன்று வலுவமாய் ஒன்று நேராய் இருந்தால் கொழுவிக் கொள்வதெப்படி?

அவள்: அதென்னவோ நான் அறியேன் நான்பார்த்த அளவில் அந்தப்பெண் மகாகுண வதி. ஆனபடியால்தான் எப்படியோ ஒரு வகையாய் அவர்கள் குடும்பம் என்ற பெயருடன் இருக்கிறார்கள்.

நான்: அன்று செத்த வீட்டுக்கு உன்னு டன் கூடிக்கொண்டு வந்தாளே அவளா அந்தப் பெண். பாவம் அவளைப்பார்க்கவே தெரிகிறது.

அவள்: அவள்தான். ஆனால் அவளைப் பார்க்க என்ன தெரிகிறது.

நான்:—ஒரு ஆபான நகை நட்டா! துணியா! ஒன்றுமே கிடையாது. கஷ்டப்படுபவள் என்று சொல்லாமலே விளங்கும்.

அவள்: அடமூடமே! சாவீட்டிற்கு அலங் கரித்துக்கொண்டு போவது அறிவுடையோர் செயலல்ல. எப்படித்தான் பணக்காரராயிருந்த போதிலும் துக்கவீட்டுக்குப்போகும் போது வீட்டிலணிந்திருக்கும் நகையே போதும். எங் கள் கலியாணச் சங்கிலியுடன் ஒரு காப்பு, தோடு, இவ்வளவும்தானே நாம் நிதமும் பாவிப்பது. இதைவிட்டுச் சந்தோஷ வீட்டுக்குச் செல வதுபோல் இன்னும் கழுத்தில் இரண்டு சங்கிலி கள் சாத்தி, கொண்டையில் கூட ஏதோ நகை செருகி பெங்களூர் பட்டுடுத்திப் போகிறவர்கள் உன்னைப்போன்ற அறிவிலிகளல்லவோ. துக்க வீட்டிலாவது உங்கள் ஆடம்பரத்தைக் குறை த்து அமைதியாக இருக்கலாகாதா?

நான்: அதுதான் நீயும் உன் சினேகிதியும் கோபக்காரரைப் போலிருந்தீகளோ? தானும தூர இருந்தபடியால் உன்னுடன் கதைக்க முடியவில்லை.

அவள்: ஆயிரந்தான் சினேகமாயிருந்தாலும் சாவீட்டில் கதைக்க முடியுமா. கதைப்பது அழ காய்த்தானிருக்குமா? பார்த்தவர்கள் என்ன சொல்லுவார்கள். துக்கமான வீட்டுக்குப்போனால் இறந்தவர்களுக்கு என்ன சுகவீனம் வந்தது என்று கேட்கமே எனக்கு மனம் வருவதில்லை. இறந்தவர்களின் பந்துக்கள் படும் அவஸ்தை யைப் பார்த்து மனமுருகுவதல்லால் வேறு கதை பேசுவதற்கும் வாய்வருமா? சிலபெண்கள் தொஞ் சமும் இரக்கமின்றி பச்சாதாபமின்றி இப்படி யான சாவீடுகளில் தங்கள் தங்கள் சினேகருடன் சேர்ந்துகொண்டு கதைப்பதும் சிரிப்பதுமாகமே காலம் களிக்கிறார்கள். இவர்கள் மனமென்ன அவ்வளவு கடினமோ? தங்களுற்குத்தான் சிறித ளவாவது துக்கமில்லாவிட்டாலும், துக்கத்தி லாழ்ந்திருக்கும் அவ்வீட்டு ஜனங்களை எண்ணிப் பார்க்கவேண்டாமா? அல்லது தங்கள் சொந் தக்காரரில் இறந்து போனவர்களையாவது எண் ணிச் சிறிது துக்கமாக இருக்கலாகாதா! அன்று அந்தத் துக்ககரமான வீட்டில் நீயும் உன் சினேகி திகளும் கதைத்த விதமும் சிரித்த சத்தமும் கேட்பதற்குச் சகிக்கவில்லையே. பார்த்தவர்கள் உங்களைக்காறி உமிழமாட்டார்களா?

(என்று கொஞ்சமும் தாட்சண்யமின்றிப் படபட வென்று கூறினாள். நானும் என்ன பதில் சொல்வதெனத் தெரியாது விழித்தேன். அவள் பின்னும் தொடர்ந்து)

பார்த்தவர்கள் பரிகசிக்க அத்தனைபேருக்கும் நடுவில் நின்று நீங்கள் நடித்த நடிப்பை அத்தனை பேரும் தானே பார்த்துப் பரிகசித்தார்கள். சீ பிசாசுகள் கூட இத்தனை துக்கமான வீட்டில் மௌனம் சாதிக்குமே. அத்தனை சந்தோஷம் உங்களுக்கு என்னதான் வந்துவிட்டது 'பாவி களே! நீ நாலு வருஷம் காணுமல் அவளைக் கண்டுவிட்டதாக இரைந்ததும், நீ பழுதாய் போய்விட்டதாக அவள் சொன்னதும், ஐயை யோ எவ்வளவு உருக்கம்! எத்தனை அன்பு! சீச்சீ கொஞ்சம் வெட்கமாவது கிடையாதா! ஆண்பிள்ளைகள் கூட வாசலில் நின்று உங்கள் திரு நடனத்தைப் பார்த்து ஏளனம் செய்திருப்பார் களே. மனசில் துக்கம்தான் இல்லாவிட்டாலும் மற்றவர்களைப் பார்த்தாவது உங்கள் வாயை அடக்கலாகாதா. ஒன்றும் அறியாப் பட்டிக் காட்டுப்புழுக்கள்போல் கண்ட இடத்திலேயே உங்கள் அங்கலாய்ப்பைக் காட்டி மரியாதை யாக இருப்பவர்களின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ளவேண்டுமா? அவ்வளவு அடக்கமில்லாவிடில் சத்தமின்றி இரண்டொரு வார்த்தை பேசமுடியாதா! சாவீடுகளில் இப் படி அமர்க்களப்பட்டுச் சந்தோஷப்பட்டு ஆர வாரிப்பவர்களைப் பார்த்த பிறசாதியார் என்ன நினைப்பர். "என்னதான் அறிவுசமானவர்களா யிருந்தாலும் அருகிலிருப்பவர்களைக் கூடத் தலைநிமிர்ந்து பாராதார்களே ஆங்கிலேயர். துக்க மானவீடு என்பது பார்த்த உடனே தெரிந்து விடுமே.

நான்: அவர்கள் அழுவது அருமையாமே. அப்படி எங்களால் இருக்கமுடியுமோ.

அவள்; அப்படி இருக்க முடியாமற்தான் சிரித்து விளையாடினீர்களோ. நம சாதிக்கேற்ற படி சாவீடுகளுக்குச் சென்றால் அவர்களுக்காக நாமும் அனுதாபப்படுகிறோம். என்பதைக் காட் டத்தான் வேண்டும். அதின்றிக் கல்நெஞ்சரா யிருப்பதுதான் ஆகாது.

நான்: சில சில பேர் கூடிக் கூடி நின்று அழு தார்களே அது ஏன்?

அவள்: அது கூடத்தெரியாத அவ்வளவு மூடமாய் விட்டாயா? அல்லது நாகரீக மமதையா? இனசனங்க எொவ்வொருவரும் தங்கள் துக்கத்தை தங்கள் சிநேகிதருடன் அழுது ஆறுவார்கள். சினேகிதர்களும் தாங்களும் சேர்ந்து அழுது தங்கள் அனுதாபத்தை வெளியிடுவார்கள். என்ன துக்கமும் சிறிது நேரம் அழுது தீர்த்துவிடுவதால் சிறிது தணிந்துவிடும் என்பது அறியாயோ. நீ பிறந்து வளர்ந்து இவ்வளவு நாளைக்குள்ளும் ஏதும் துக்கம் சம்பவித்து நீ அழுததே கிடையாதா?

நான்: அதசரி கூட அழத் துக்கமில்லாதவர்கள் சேர்ந்தழுவது எப்படி?

அவள்: துக்கமில்லாவிடில் மற்றவர்கள் அழுவதைப் பார்த்தாலே கண்ணீர் தானாக வந்துவிடுமே. அப்படிக் கல்நெஞ்சராயிருந்தால் தங்கள் சொந்தத் துக்கசங்கதிகளை ஏதும் நினைக்கலாமே. நான் சிறுபிள்ளையாயிருக்கும்போது என்தம்பி ஒருவன் இறந்துவிட்டான். அதற்கு வந்திருந்தவர்கள் யாவரும் மிகவும் உருக்கமாக அழுதார்கள். அவர்களது ஒப்பாரியைக் கவனித்த அளவில் எங்களின் நெருங்கிய சொந்தக் காறரைத் தவிர மற்ற யாவரும் தங்கள் தங்கள் இனத்தவர்களை நினைத்தே அழுதார்கள். அது ஏன் என நினைத்துப்பார்த்தால் சாவீட்டுக்குப் போயிருந்தால் அழாமல் சும்மா இருப்பது அழகல்லவென்பதுதான் அவர்களெண்ணம் என்பது புலப்படும். ஆனால் இவ்வூரில் வசிக்கும் எங்களுக்கு அப்படியாக நடப்பது முடியாததான். உபகாரம் செய்ய முடியாவிடில் அபகாரமாவது செய்யாதிரு என்பது ஓர் அரிய முதுமொழி. அப்படியே நாமும் ஒன்றும் செய்ய இயலாவிட்டால் பேசாமலாவது இருக்கலாகாதா? சாவீட்டில் சிரித்துக் கதைத்துச் சந்தோஷமாயிருப்பவர்கள் எத்துணை கல்நெஞ்சராயிருக்க வேண்டும்.

நான்: இவ்வளவு தூரம் ஏசுகிறாயே. அந்த நேரத்திலேயே எனக்கு ஒருசொல் சொல்லியிருக்கலாகாதா. சொல்லியிருந்தால் நான் அவ்வளவில்நிறுத்தி இருப்பேனே.

அவள்:— அந்த இடத்தில் நான் சொல்லுவது இன்னொரு வேடிக்கையாக முடிந்திருக்கும். அத்துடன் அங்கு ஓர் இடத்தில் நடந்ததுபோல் பெருஞ்சண்டை மூண்டாலும் மூண்டிருக்குமே.

நான்:—என்ன! எங்கு! அப்படிச் சண்டை மூண்டது?

அவள்:—அது இவ்வூரில் நடந்ததல்ல. வேறு ஊர். அங்கு ஒரு துக்கவீட்டில் பல பெண்கள் கூடி இருந்து அழுதுவிட்டுச் சற்றுஓய்ந்தார்களாம் அந்த வீட்டுக்காறப் பெண் ஏதோ சொன்னதற்கு சில பெண்கள் சிரித்தார்களாம். அதைக் கேட்டிருந்த இன்னொருபெண் "துக்கவீடா இது சந்தோஷமான வீடா? துக்கமான வீட்டில் இப்படிச் சிரிக்கலாமோ?" என்றாளாம். உடனே சிரித்தவர்கள் யாவரும் சண்டைக்குப்போய்விட்டார்களாம். அது பெருங் கலகமாய் வெளியில் இருந்த ஆண் பிள்ளைகளுக்கும் எட்டிவிட்டதாம். அவர்கள் மவுனமாகத் தங்கள் வாயாடி மனைவியரை வீட்டுக்கு வரும்படி அழைத்தார்களாம். அதற்கு அப்பெண்கள் அசையவில்லையாம். தங்களாலானவரையில் சண்டையிட்டு ஓய்ந்துதான் போனார்களாம். எப்படியிருக்கிறது எங்கள் சமூக ஊழல்.

நான்:—அப்படியும் நம் சமூகத்தில் படித்த அறிவாளிகளான பெண்களிருப்பார்களா? (என்று எனது ஆச்சரியத்தை வெளிப்படுத்தினேன்)

அவள்:—உனக்கு அவ்வளவு அதிசயமாயிருக்கிறதா. நீ என்ன படித்தவளா? மூடமா?

நான்:—உண்மையிவ் ஏட்டுப் படிப்பில் என்ன இருக்கிறது. உன்னைப்போன்ற அனுபோகஸ்தரின் போதனையே மிகவும் சிறந்தது. அதில்லாத படிப்பும் நாகரீகமும் ஒன்றுக்கும் உதவற்றது.

அவள்:—அந்தப் புகழ் எல்லாம் போதும். இன்னும் நம் சமூகத்திலுள்ள ஊழல்களைப் பார். சாவீடுகளில் சுருட்டுப் புகைப்பது இன்னொரு கேவலம். கொளளிவாய்ப் பிசாசுகள் போல் யாவர் வாயிலும் ஒரே நெருப்பும் புகையும்தான். அந்த நேரத்திலாவது அந்தப் புகையை விட்டு மற்றவர்க்கு அதிகம் தொந்தரவு கொடுக்காமலிருக்கலாகாதா. அப்படி அடக்கமற்றவர்கள் ஒவ்வொரு சுருட்டை எடுத்துச் சென்று வெளியிடத்தில் பற்றவைத்து அது முடிய உள்ளுக்கு வந்து உட்காரலாமே. என்ன வேலை செய்யும்போதும், ஆட்களை அழைக்கும்போதும், என்னைப் பார்த்தாலும், குச்சிபோல் வாயிலொன்றை வைத்திருப்பதைப் பார்த்திருப்பதே பெரிய அசிங்கமாயிருக்கிறது.

நான்:—அப்படியானால் வெற்றிலை மட்டும் போட்டுக்கொள்ளலாமோ.

அவள்:—எச்சிலால் அவர்கள் வீட்டை அசுசிப்படுத்தாமல் வெற்றிலை போட்டுக் கொள்வதால், மற்றவர்க்கு ஒரு தொந்தரவுமில்லை. வெற்றிலை போட்டால் துப்பவேண்டும் என்பவர்கள் போடாமலிருப்பதே நல்லது. நான் முன்சொல்லியபடி பெண்கள் சேர்ந்தழும்போது வெற்றிலை போட்டுக் கொண்டால் வாய் நாற்றமில்லாமலிருக்கும். இன்னும் சாவீட்டிலோ கலியாண வீட்டிலோ தேவையான வற்றை முதலிலே விசாரித்துச் சேகரித்து வைத்துக கொள்ள வேண்டும். அதைமறந்து இருந்து விட்டால் இரகசியமாக அதைக் குருக்களிடமோ அல்லது அறிந்தவரிட

மோ கேட்டு சந்தடியில்லாமல் எடுத்து வந்துவிடலாம். அதைவிட்டு ஒருவர் அரிசி யென்றால் அதற்குப் பக்கத்தில் நிற்பவர் சிலர் அசையாமல் நின்று கொண்டு அரிசி, அரிசி வரட்டும் என்று இப்படி அலுவசியமாகக்கூக்குரல் செய்துகொண்டு நிற்பது பார்ப்பதற்கு கேவலமாகத் தோன்றும். அந்த இடங்களில் பலர்முகாமைக்கு எழும்பிவிடுகின்றனர். ஆனால் வீண் ஆடம்பர மொழியச் செய்வதென்றுமில்லை.

நான்:—இதெல்லாம் எனக்குச் சொல்லி ஆவ தென்ன?

அவள்:—பெண்களே இதெல்லாம் பார்க்க வேண்டியவர்கள். தங்கள் புருஷர் எந்நேரம் பார்த்தாலும் வாயில் சுழட்டுடன் இல்லாமல் இப்படியான இடங்களிலாவது மரியாதையாக இருக்கும்படி செய்வது பெண்களாலன்றி மற்றவரால் ஆகுமா? ஆனால் பெண்களைத்திருத்துவது புருஷர் பொறுப்பே. சாவீடுகளில் அடக்கமாக இருக்கும்படி புத்தி சொல்வது அவர்கள்கடன். எல்லாவற்றையும் ஆராய்ந்து நம் சமூக ஊழல்களிலுள்ள குற்றங்களை விலத்தி மறுசாதியார் மெச்சும்படியாக நம்மவர் நடந்து கொண்டால் மேன்மையாகும். (இது உண்மையாதலால் எங்கள் சம்பாஷணையை அப்படியே எழுதினேன்.) சகோதரிகளே! நன்றாய் யோசிப்பீர்களாக.

சரஸ்வதி அல்லது லக்ஷ்மி - - - உண்டேல் உயர்வை அடையலாம்

[முற்றொடர்]

அம்பிகைபாகர், ஜெகராஜ மணியம் சகலரும் காப்பி அருந்தி ஆயதும் "தம்பியின் கடிதம் ஏதும் கொழும்பிலிருந்து வந்துதோ" என்று கதையைத் தொடங்கினாள் அம்பிகைபாகர் பாரியாள்.

"நான் கொழும்பிற்குப் போய் முந்தநாட்தான் வந்தேன். நேற்றே இங்கு வாலாமென்றிருந்த நான், வேறு அவசிய வேலை காரணமாக வரமுடியாமற் போய்விட்டது. நான் தம்பிக்கு சகல விஷயங்களும் சொல்லிக் கூடியசீக்கிரத்தில் லீவு எடுக்கும்படி சொன்னேன். அவன் எல்லாவற்றிற்கும் சம்மதப்பட்டு; கம்பெனியில் லீவு கேட்க அவர்கள் அடுத்த வாரத்திலிருந்து இரண்டு வாரங்கள் லீவு கொடுப்பதாகக் கூறியிருக்கிறார்கள்." எனப் புகன்றார் மணியகாரன்.

"ஓ! அப்படியா! அப்படியானால் நாங்கள் சகல காரியங்களுக்கும் இப்பொழுதிருந்தே கவனம் செலுத்தத் தொடங்க வேண்டும். முதல் சட்டிநாதக் குருக்களை வரவழைத்து முகூர்த்த நாளை ஏற்படுத்திக் கொண்டால், மற்றவைகளை யெல்லாம் அதற்கேற்றாப்போல ஒழுங்குபடுத்திக் கொள்ளலாம்" என்று அம்பிகைபாகர்கூற மணியகாரன் ஆமோதித்தார். உடனே அம்பிகைபாகர் தனது மோட்டார் சாரதியைக் கூவி, ரதத்தை ஓட்டிப்போய்ச் சட்டிநாதக் குருக்களை அழைத்து வரும்படி கட்டளையிட்டார்.

"நானும் இப்போதான் வெளியே போயிருந்து வந்தேன். 400 பரப்பு செம்பாட்டு நிலம் வாங்கி விட்டிருக்கிறேன். அதில் கல்லுக் கிளப்பி நிலத்தை பண்படுத்த வேண்டும். அங்கங்கு கிணறுகள் தோண்டவேண்டும். எங்களுக்கு வேண்டிய புகையிலையை நாங்களே பயிரிட்டு, முதல்தரமானதாகப் பண்படுத்தி எங்கள் புகையிலை சுருட்டு வியாபாரங்களைக் கூடியளவு உச்சஸ்தானத்தை அடையப்பண்ணவேண்டும். எங்கள் சுருட்டுக் கம்பெனி முதற்தரமான மேன்மையை அடைந்து சிறப்புற்று விளங்க வேண்டுமென்பது என்னுடைய அவா. சும்மா வெளியாகக் கிடக்கும் செம்பாட்டு நிலங்களை என் உபயோகத்திற்குக் கொண்டுவரக் கூடாது. எங்கள் சுருட்டு வியாபாரம் இப்போ சிறிது மந்தமடையப் பார்க்கிறது. நியாயம் தற்காலத்து வாலிபர்கள் அனேகமாக மேல்நாட்டுச் சுருட்டு சிகரெட்டுகளைப் பாவிப்பதுதான். நான் இதைப்பற்றி அநேகமாக விசாரித்தளவில் அவர்கள் கூற்று என்னவென்றால், எங்கள் ஊர் சுருட்டைப் பொக்குப் பொக்கென்று பற்றவைக்க வேண்டியிருக்குதாம் புகையோ தாராளமாக வருவதில்லையாம், மிதமிஞ்சிய காரமாயிருக்குதாம், சொண்டுகள் கருத்துப்போகுதாம்; சிலர் கூற்று எங்கள் ஊர் சுருட்டு மயக்கத்தைக்கொடுக்குதாம், வெள்ளைக்காரன் சுருட்டு

ரொட்டி சுடுவதற்கு நல்ல பெலத்தைக் கொடுக்கக்கூடிய ஒடியல் மா, மரவள்ளிக்கிழங்கு மா, குரக்கன் மா முதலியவை ஏராளமாக உண்டு. காய் கறி பயிரிட ஏராளமான செம்பாட்டு நிலக்கள் உண்டு. சொக்லேற்றைப் போன்ற பலவிதமான இனிப்புகள் சரிக்கட்ட, பனாட்டு, பனை வெல்லம், பனங் கல்லக்காரம் முதலியவைகளைத் தரக்கூடிய கற்பக விருட்சத்தைப் போன்ற ஏராளமான பனை மரங்களுண்டு. ஆடைகளுக்கே பருத்தி பயிரிட வேண்டிய சகல வசதிகளு உண்டு. நெசவுத்தொழில் தெரிந்தோரும் ஏராளமாக ண்டு. எங்க நாடு ஓர் சுதந்தரமான நாடு. நாங்கள் பிற சாதியாரிடம்! எப்பொருளுக்காயினும் கை நீட்டாது தாராளமாக வாழக்கூடிய சகல சம்பத்துகளும் எங்க ஊரில் உண்டு. பின் எங்களுக்குள்ள வினை என்னவென்றால், கண்ணிருந்தும் பார்க்க முடியாது பரதவிக்கிறோம், காதிருந்தும் கேட்க முடியாது தத்தளிக்கிறோம், வாயிருந்தும் பேச முடியாது பிதற்றுகிறோம், காலிருந்தும் நடக்க முடியாது; தள்ளாடுகிறோம். கையிருந்தும் வேலைகள் செய்ய முடியாது படபடக்கிறோம். இப்படியான இந்த வருத்தங்களுக்கெல்லாம் சஞ்சீவி மாத்திரை எங்கு அகப்படுமோ!" என்று கூறிச் சிரித்தார் அம்பிகைபாகர்.

அவரைப் பின்பற்றிக் குருக்களும் மணியகாரனும் பெலத்த சத்தமிட்டுச் சிரித்தார்கள். "தாங்கள் என்னை வரவழைத்தது யாது காரணம் பற்றியோ" என்றார் குருக்கள்.

"எனது மகள் ஸரசுக்கும், மணியகார ஐயாவுடைய மகனுக்கும் விவாக சம்பந்தம் செய்வதாக நிட்சயித்திருப்பதால், நீங்கள் பார்த்து நல்ல முகூர்த்தம் ஏற்படுத்தி, அன்று தாங்களே குருவாகவிருந்து சகல சடங்குகளையும் செய்து, தம் பதிகளை ஆசீர்வதிக்க வேண்டும்," என்று குருக்களை வேண்டினார் அம்பிகைபாகர்.

குருக்கள் பஞ்சாங்கத்தைப் பார்த்து அன்றிருந்து பதினைந்தாம் நாள் இரவு பதிமூரு மணியளவில் நல்ல சுபமுகூர்த்தமென்றும், அதற்கு வேண்டிய ஒழுங்குகளையெல்லாம் செய்யும்படியும், கலியாணச் சடங்குகளைச் செய்யத் தான் வருவதாகவும் கூறி விடைபெற்றுக் கொண்டு போய்விட்டார். உடனே பாலுவுக்கு வேலையை விட்டுவிட்டு வரும்படியாகக் கடிதம் எழுதும்படியும், கலியாணத்திற்கு வேண்டிய சகல ஒழுங்குகளையும் செய்ய ஆரம்பிக்கும்படியாக மணியகாரனை நோக்கிக் கூறினார் அம்பிகைபாகர். ஜெகராஜமாணிக்க மணியகாரனும் மிக்க சந்தோஷத்தோடு விடைபெற்றுக் கொண்டு தமதில்லம் சேர்ந்தார்.

[தொடரும்]

தமிழ் மொழி

"தமிழ்க் கல்வியும் சைவ சமயமும் அபிவிருத்தியாதற்குக் கருவிகள் முக்கிய ஸ்தலந்தோறும் வித்தியாசாலை ஸ்தாபித்தலும் சைவப் பிரசாரணஞ் செய்வித்தலுமேயாம். இவற்றின் பொருட்டு கிரமமாகக் கற்றவல்ல உபாத்தியாயர்களும் சைவப்பிரசாரகர்களும் வேண்டப்படுபவர்கள். ஆதலினாலே நல்லொழுக்கமும், விவேகமும் கல்வியில் விருப்பமும், இடையறு முயற்சியும், ஆரோக்கியமும் உடையவர்களாய்ப் பரீட்சீக்கப்பட்ட பிள்ளைகள் பலரைச் சேர்த்து, அன்னம் வஸ்திரம் முதலியவை கொடுத்து உயர்வாகிய இலக்கண இலக்கியங்களையும் சைவசாத்திரங்களையும் கற்பித்தல் வேண்டும். அவர்களுள்ளே தேர்ச்சியடைந்தவர்களையே உபாத்தியாயர்களாகவும் சைவப்பிரசாரகர்களாகவும் நியோகிக்கலாம்."

—ஆறுமுகநாவலர்.

தோற்றுவாய் (Introductory)

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் நமது யாழ்ப் பாணத்திற்றோன்றித் தமிழ் உலகு முழுதிற்கும் தமிழ்க்கல்வி வளர்ச்சிக்கும் சைவசமய உணர்ச்சிக்கும பெரிதும் உழைத்தார். அவர் ஆர்வம் கொண்டு தமிழ் உலகுக்கு ஆற்றின தொண்டு நம்மனோரால் கணிக்கப் பாலதன்று. நாவலரவர்கள் அன்னம் வஸ்திரம் முதலியவை கொடுத்துப் பிள்ளைகளுக்கு உயர்வாகிய இலக்கண இலக்கியக் கல்வியை ஊட்டல் வேணும் என்றார். ஆனால் தற்காலத்தில் அன்னம் வஸ்திரம் முதலியவற்றைக் கொடாவிட்டாலும் தாய் மொழியை இலக்கண இலக்கியத்தோடு தகுந்த உயர்வான முறையிற் பிள்ளைகளுக்கு ஊட்டுகிறோமா?

நாட்டுத்தமிழ்ப் பாடசாலைகள்.

நமது கிராமங்களிலிருக்கும் அநேகம் தமிழ்ப் பாடசாலைகள் ஏறக்குறைய நூறுவருடங்களுக்கு முன் நிறுவப்பெற்றவைகள். இவையின் கட்டிடம் தற்காலச் சுகாதார முறைக்குப் பொருத்த முடையவையல்ல. பழுதடைந்த பழம்கொட்டில்களே நமது நாட்டுப் பள்ளிக்கூடங்கள். மண் திண்ணைகள் ஆசனமாசப பாவிக்கப் படுகிறது. வெய்யில், மழை, காற்றுவராது காத்துக் கொள்வதற்கு மண் சிவர்களாகுதல் எழுப்பப் பட்டிருக்கவில்லை. மற்றும் அவசிய வசதியாகிய மலசலம் கழிக்கும் வசதி, தாகசாந்தி செய்ய ஜலவசதிகள் கிடையா. அரசாங்கத்தார் கட்டிடத்திற்காவது கட்டிடப் பாதுகாப்பிற்காவது பணம் உதவுவதில்லை. ஆகவே தற்காலச் சுகாதார முறைப்படி கட்டிடத்தைத் திருத்தி அமைக்கவும் மற்றும் அவசிய வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளும்படியும வற்புறுத்துவது எளிதல்ல. கட்டிடப் பாதுகாப்புக்குப் பணம் உதவாது கட்டிடத்தை ஒழுங்கான முறையில் வைத்திருக்கும் படி கட்டாயப்படுத்துவது, தண்டி நித்திய நைமித்தியங்களைச் செய்யும் ஒரு பூசாரியை நேரம் தவறுது கோயிலுக்கு விளக்கேற்றச் சொல்வதற்கு ஒக்குமல்லவா? இப்படியான சீர்கெட்ட முறையில் அநேகம் கிராமப்பாடசாலைகள் இருந்கின்றன. ஊரவர்கள் இந்தப் பாடசாலைகள் கிறீஸ்தவர்களால் நடாத்தப் படுவதால் பணம் உதவுவதில்லை சில இடங்களில் ஊரவர்கள் தங்கள் சமயக்கொள்கையின் படிபாடசாலைகளை ஸ்தாபித்து செவ்வனே நடாத்தி வருகிறார்கள். சைவவித்தியா விருத்திச் சங்கத்தாராலும் பலபாடசாலைகள் நடாத்தப்படுகின்றன. அநேகம் கிராமங்களில் கிராமவாசிகள் சுயநலம் கருதினவர்களாய் மாத்திரம் வசிக்கிறார்கள். பொதுசனதன்மைக்காகச் சமயக்கொள்கைப்படி பாடசாலைகளை ஸ்தாபிக்க முன் வருகிறார்களில்லை. [கிறீஸ்தவர்களே என்றென்றைக்கும் நமது நாட்டின் கல்விப்பொறுப்பை எடுத்துக்கொள்ளல் வேண்டும் என்றும் சைவர்களாகிய நாங்கள் வருந்தாதிருந்து கல்விகற்று வாழ்நாளைக் கழிக்கலாமென்றுட் எண்ணுகிறோம் போலும்.]

மலாய் நாட்டில் வசிக்கும் யாழ்ப்பாணத்தவர்கள் முந்திய நாட்போலவர்களல்லாது வெள்ளையர்கள் சீனத் தனவந்தர்கள் முதலியோரைப் பார்த்துத் தாமும் வாழ்க்கைக்கு வேண்டிய சௌகரியங்களை அதிகரித்துக் கொண்டனர். ஆடல் பாடல்களில் மனதைச் செல்லவிட்டுப் பின் துன்புறுகின்றனர். ஆகவே தரும விஷயங்களைப் பற்றிச் சிந்திக்கப் பொருள் இல்லாதவர்களாக வருந்துகிறார்கள். தாய்நாட்டிலிருப்பவர்களும் இவர்களுக்குக் குறைந்தவர்களல்ல. பின் தரும கங்கரியங்களைப் பற்றிச் சிந்திப்பர் எவர்?

ஆங்கிலப் பாடசாலைகளும் தமிழ்க் கல்வியும்.

தமிழ் மூன்றுவது வகுப்பிற் பரீட்சையிற் சித்தியடைந்த பின்னரே பிள்ளைகள் ஆங்கிலப் பாடசாலைகளில் எடுக்கப்படுவர்கள். எமது கல்வி நிபுணர்கள் ஆங்கிலப் பாடசாலைகளிற் சேர்ந்த பிள்ளைகளுக்குத் தினம் ஏழில் ஒருபாக நேரத்தை மாத்திரம்தான் தமிழ்க்கல்விக்காக வகுத்து வைத்திருக்கிறார்கள். இபபடியான முறையில் ஆங்கிலப் பாடசாலையில் தாய்மொழியில் பாண்டித்தியம் பெறமுடியாதென்பது வெளிப்படை.

பெண்கள் கல்விமுறை

பெண்பாலர்களுக்கு, நமது நாட்டில் ஊட்டும் கல்விமுறையைப் பார்த்தால் அது அவர்கள் வாழ்க்கைக்குப் பயன்படுவன வற்றுய் எண்ண இடமில்லை. பெண்கள் இல்லறத்தை நல்லறமாக நடாத்தப் பயிற்றப்பட வொண்ணுதா? ஔவைப் பிராட்டியார் "இல்லற மல்லது நல்லற மன்று" எனத்திருவாய் மலர்ந்தருளினது இங்கே குறிப்பிடத்தக்கது.

"இல்வாழ்வானென்பா னியல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றி னின்ற துணை" —குறள்

பெண்கள் இல்லறத்தை நல்லறமாக நடாத்தும் ஆற்றல் அறிவுமுடையவர்களாயிருந்தாலன்றே இல்வாழ்க்கை இன்பமாயும் தமக்கும் பிறர்க்கும் பயன் படத்தக்கதாயும் இருக்கும். ஆடவரும் மகளிரும் கூடியே இல்லறம் ஏற்படுகிறது. ஆனதால் வீட்டுக்கரசியான மங்கையர் முறைப்படி செந்தமிழ் நூல்களை ஆராயவேண்டாமா?

"இல்லாளகத்திருக்க வில்லாத தொன்றில்லை
யில்லாளுமில்லாளேமாயி—னில்லாள்
வலிகிடந்த மாற்ற முரைக்குமே லவ்வின்
புலிகிடந்த தூறுய் விடும்" மூதுரை

மனையாளில்லாத வீடும், மனையாளிருந்தும் கடுமைபொருந்திய சொற்களைச் சொல்லுகிறவ

ளாயிருந்தால் அந்தவீடும் புலிதங்கிய புதற்போல் ஆய்விடும்என்க.

நாம் நமது அறிவினத்தால் நமது அருமைப் புதல்விகளுக்கு எமது அமிழ்தினும் இனிய செந் தமிழில் எத்தனையோ அறிவு நூல்கள் இருக்க அவற்றைப் புறக்கணித்து ஆங்கிலத்தை மாத்திரம் கற்பிக்கிறோம்

"துறந்தார்க்குந் துவ்வாதவர்க்கும் மிறந்தார்க்கும் இலவாழ்வானென்பான் தூணை" —குறள்

இல்லக்கழத்தி இல்லாது இல்வாழ்வேது? ஆகவே இதுகாறுங் கூறியவற்றால் மெல்லியர்கள் தங்கள் தங்கள் சமயமுறைப்படி தாய்மொழியைக்கற்று இல்லறத்தை நல்லறமாக நடாத்தும் ஆற்றலையும் அறிவையும் பெறுதல் வேணும் என்றது சொல்லாதே போதரும். வயிற்றுப் பிழைப்புக்காகப் படிப்பைக்கொண்டு ஊதியந்தேடி அலையாத பாவையர்கள் அருட்செல்வமாகிய இனிய தமிழைப் புறக்கணித்து ஆங்கிலத்தை மாத்திரம் படிப்பது எத்தனை கோடி மடமை! இது "விருதுக்கு வேட்டையாடுவது" போலும்———— "கெடுகிறேன் பந்தயம் பிடி" என்ற மாதிரியு மல்லவா தோணுகிறது. எத்தனையோ மகான்கள் தாய்மொழியை அண்ணிய பாஷையிலும் பார்க்க ஊக்கம் எடுத்துக் கற்கவேணும் என்று வற்புறுத்திவர நாம் திருந்தாது மாட்டு வாலைப்போல் வளர்வது நமக்கு முற்போக்கான அறிவில்லை என்றதற்கு அறிகுறியா? எமது நோக்கு "சாபிணம் மருந்துட்கொள்ளா" என்றதற்கு இணங்குமல்லவா? ஆங்கிலத்தைப் படிக்கக் கூடாதென்று இன்னுளில் சொல்வாருமுளரோ? ஆனால் முதலில் தாய்மொழியில் அறிவை வளர்த்துக்கொண்டு ஆங்கிலத்தை உதவிப்பாஷையாகப் படித்தல் முறையாகும்.

பிறதேசமும் தாய் மொழியும்

யப்பான் தேசத்தையும் மேலைத் தேசங்களையும் நோக்குமிடத்து அத்தேசங்களில் தாய் மொழியே தலையிடம் பெற்றிருக்கிறது. தாய் மொழி வளர்ச்சியாலேயே அந்த நாடுகள் உன்னத நிலைக்கு வந்திருக்கிறது. ஆதலால் தாய் மொழியின் சிறப்பல்லவா நாட்டுச் சிறப்பு? தாய் மொழியின் பெயரல்லவா அந்நாட்டு மக்களின் பெயர். நம் நாட்டில் சில மக்கள் தங்கள் நாமத்தையும் அன்னிய மொழிப் பெயர்களுக்கும் மாற்றிக் கொள்ளுகிறார்கள். ஒரு சிலர் உத்தியோகம் பெறுவதற்காகத் தங்கள் பெயரை மனச் சாட்சிக்கு விரோதமாய் மாற்றிக் கொள்கிறார்கள். கடன் வாங்கி வயிறுரப் புசிப்பதற்கும் சிலர் ஆங்கிலப் பெயரை எடுத்துக் கொள்கிறார்கள்.

தாய் மொழியின் பெருமை.

தாய் மொழியின் பெருமையை ஒன்றும் தவறாது எடுத்துக் காட்டச் சிறியதோர் கட்டுரை இடம் தருமா? எம்போலியவர்க்கு முடியுமா? நாம் தாய் மொழியின் பெருமையை ஒன்றும் தவறாது சரிவர அறிய விரும்பினால் பழையபடி விகாயகரை வேண்டி எஞ்சிய கொம்பை ஒடித்துத் தாய் மொழியின் பெருமை அனைத்தையும் புதியதோர் பாரதமாக எழுதிவிடத் தவங்கிடந்து செய்வித்தல் வேண்டும். இம்மை மறுமை இரண்டிலும் உயிருக்குற்ற துணையாய் உதவுவது தாய் மொழியே! கல்வி கொடுக்கக் கொடுக்க நிறையும், இருளைப் போக்கும், புத்தியை வளர்க்கும், அறிவை யூட்டும், அழியாத ஆஸ்தியாகும், அருளைத் தரும், ஆபத்திலிருந்து தப்புவிக்கும், காமாதிகளை நாசமாக்கும்.

நாம் இப்புவியிற் றோன்றின உடனேயே அ! அ!.....ஆ! ஆ! ஆ!..... உ! உ!..... ஊ! ஊ! ஊ!..... என்றே வாய்கூட்டி அழவும் பேசவும் தொடங்குகின்றோம். அப்படியிருக்க நமது அரிய செந்தமிழைப் புறக்கணித்து முதலிலேயே ஆங்கிலபாடை மோகத்தில் ஆழ்ந்து விடுகிறோம். நமது செந்தமிழ் நூல்களை நாம் ஆராய்வதால் அறம் வளரும், அருள் பெருகும், இருள் நீங்கும், அன்பு ஊற்றெடுக்கும், அரசியல் சிறக்கும், நாடு முன்னேறும்.

தமிழ் அன்னையின் வயிற்றில் உற்பத்தியாகிப் பிறந்தவர்களிற் சிலர், பேரின்பம் கனிந்தொளிர்வீசும் செந்தமிழை எழுத வாசிக்கத் தெரியாதவர்களாக இருக்கிறார்களாமே! ஒருபாஷையையும் கற்க வகையற்றவர்கள் ஒருபுறமிருக்கக் கல்வி கற்க வசதியுள்ளாரும், தமது சுயபாஷையைக் கல்லாது விடுகிறார்களாமே! பெண்களும் தாய் மொழியை ஒரு சிறிதும் அறியாது ஆங்கிலமொழியில் மாத்திரம் மோகங் கொண்டிருக்கிறார்களாமே! இவை பெரிதும் வருந்தத்தக்க தன்றோ?

நமது நாட்டில் தேசாபிமானிகள் பாஷாபிமானிகள் இல்லாதகுறையினால் ஏற்பட்ட நிலையிதன்றோ! இற்றை உலகில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்களைப் போற்பிறக்குபகாரி ஒருவர் நம் நாட்டிலுதிப்பின் அவர்மனம்தான் எவ்விதம் தயங்குமோ நாமறியேம்!

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலவர்களைப் பின் பற்றி நாமும் நமது நாட்டிற்கு உழையாது இருப்பது முறையோ?

இந்தியாவும் தாய்மொழியும்.

நமது இந்தியச் சகோதர சகோதரிகள் இந்தியாவில் தற்போது தாய்மொழி வளர்ச்சிக்குப்போதிய கவனம் செலுத்தி வருகிறார்கள். தாய்ப்பாஷையை முதற்பாஷையாகவும் ஆங்கிலத்தை உதவிப் பாஷையாகவும் படிக்கிறார்கள், இது பெரிதும் போற்றற்பாலது. இந்தியதேச முன்னேற்றத்துக்கும் கூணிபுரிந்து வருவது தாய்மொழி அறிவு வளர்ச்சியோ!

மலையாளிலோ தமிழ் மக்கள் தொடக்கத்திலிருந்தே அன்னிய பாஷையைப் படிக்கிறார்கள். மலையாளில் தமிழ்மக்கள் தாய்மொழிகற்கும் வசதியை ஏற்படுத்திக் கொள்வது அவர்களைப் பொறுத்த தோர் பெரும் கடமை. தாய்மொழி முன்னேற்றத்துக்காக உழைத்த பெரியாரையும் புலவர்களையும் நாம் பொன்னே போற்றல் வேண்டாமா? அவர்கள் புகழுடம்பைப் போற்றி அவர்கள் ஜயந்தியைக் கொண்டாடுவதினால் எமக்கும் எமதுதாய் மொழி அபேட்சை ஏறபடுமல்லவா? இதிலும் இந்தியர்கள் இடை விடாது ஊக்கம் காட்டிவருகிறார்கள்.

கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாஞ் சிறப்பு.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் நாவல்லமையைக்கண்டு ஆச்சரிய முற்று திருவாவடுதுறையில் பலவித்துவான்கள்கூடி இவருக்கு நாவலர் என்ற பட்டத்தைச் சூட்டினார்கள். ஆனதால் கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் புகழுண்டு.

நாட்டின் தாய்மொழிக் குழைப்பதே முதன்மை.

நாட்டின் வளர்ச்சிகருதி யுழைக்குந்துறைகளாயாவற்றுள்ளும் அந்நாட்டுமொழி அபிவிருத்திக்குழைப்பதே முதன்மையாய்ந்த தென்பர் அறிஞர் கவி அரசர் தாகூரும், காசி இந்துச் சர்வகலாசாலை அதிபர் மளவியாவும், மகாத்துமாவும் இதற்குச் சான்று.

அறிஞரும் தமிழ்மொழி மதிப்பும்.

தமிழ்—"ததித்தனிமுக்கனி பிழிந்து வடித்தொன்றாய்க் கூட்டிச் சர்க்கரையும் கற்கண்டின் பொடியும் மிகக்கலந்து தனித்த நறுந்தேன் பெய்து, பசும்பாலும் தெங்கின் தனிப்பாலுஞ் சேர்த்து ஒருதீம் பருப்பிடியும் விரவி இனித்த நறு நெய்யளைந்து, இளஞ் சூட்டில் இறக்கி எடுத்த சுவைக்கட்டியினும் இனித்திடும் தெள்ளிய அமிழ்தத்தின் ஆற்ற இனிக்கும்" என்று ஒரு அறிஞர் வருணிக்கிறார். இப்படியானவர்கள் தமிழ்மொழியில் வைத்திருக்கும் மதிப்பிற்கும் நமைப் போன்றவர்கள் வைத்திருக்கும் மதிப்பிற்கும் இருக்கும் வெளியைப்பார்த்து நெஞ்சந் திடுக்கிடுகிறது.

உலகத்தில் பலபாஷைகளையும் ஆராய்கிற மேதாதிகள் தமிழுக்கு முதல் இடமே கொடுத்து வருகிறார்கள். சுப்பிரமணிய பாரதியார் "யாமறிந்த மொழிகளுளே தமிழ் மொழி போலினிதாவ தெங்குங் காணோம்" என்று பாடி அருளினார்.

இன்னொரு இடத்தில் "கம்பன் பிறந்த தமிழ் நாடு" என்றும் "கம்பனைப் போல், வள்ளுவனைப் போல் புகழ் பெறு புலவரை உலகிலே கண்டிலேம்" என்றும் பாரதியார் கூறியிருக்கிறார்.

எல்லாப் பாஷைக்கும் தமிழே பிறப்பிடமென்றும் அறிஞர் பலர் கூறுகிறார்கள். தமிழ் அடிச் சொற்களே ஆதிச் சொற்கள் என்று சுவாமி ஞானப்பிரகாசரும் எடுத்துக் காட்டுகிறார்.

"போப் என்னும் ஒரு கிறிஸ்தவ ஆங்கிலக் கலை வல்லாளர் திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். எத்தனையோ அன்னிய தேசக் கல்விமான்கள நமது மதிக்கவொண்ணாத இனிய செந்தமிழைக் கற்கிறார்கள். எத்தனையோ நூல்களைத் தங்கள் தங்கள் பாஷைக்கு மொழி பெயர்த்து வருகிறார்கள்.

வித்தியா தருமமே தருமத்தில் தருமம்.

உலகத்தில் தருமமெல்லாவற்றினும் மேலான தருமம் வித்தியா தருமம். அதிலும் தாய் மொழியைத் தத்தம் சமயக் கொள்கைப்படி படிப்பிப்பதே எல்லாவற்றினும் மேலானது.

"இன்னருங் கனிச் சோலைகள் செய்தல்
இனியநீர்த் தண்சுனை களியற்றல்
அன்ன சத்திர மாயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஓனிர நிறுத்தல்
அன்னையாவினும் புண்ணியங் கோடி
அங்கோ ரேழைக் கெழுத்தறிவித்தல்"

—சுப்பிரமணிய பாரதியார்.

பாரதியார் ஒரு ஏழைக் கெழுத்தறிவித்தலைப் பெரும் தருமமாய் வியந்து பாடினால் பாடசாலைகளை ஸ்தாபித்து ஏழைகளுக்குச் சமயக் கொள்கையின்படி இலக்கண இலக்கியச் சுவை வழுவாது செந்தமிழைப் படிப்பிப்பது எத்தனை கோடி புண்ணியம்? தமிழ் மக்கள், நாடுகள்தோறும் பாடசாலைகளை ஸ்தாபித்து அன்பாகிய உள்ளத்தை உருக்கி அன்பு வெள்ளத்தில் ஆழ்த்தும் அரிய தமிழை நல்லாசிரியர் மூலம் இலக்கண இலக்கியச் சுவை வழுவாது படிப்பிப்பார்களாக! இறை அருள் புரிவாராக!!

V Nadaraja
Ipoh,

நன்மதி

என்தருமைக் குழந்தாய்,

மங்களம் உண்டாகக் கடவது.

பெண்ணாய்ப் பிறந்தவர்கள் ஆடவருக்கு வாழ்க்கைப்பட்டுத்தான் வாழவேண்டி யிருக்கிறது. இவ்விதி வாழ்க்கையிலும் தம் அரும் பெருங் குணங்களால் பிரகாசித்து தற்காலமும் நம்மினைவாலும் சிரோபூஷணமாகக் கருதப்படும் நாரீமணிகளிலனேகர் நம் நாட்டிலிருக்கின்றனர். நீயும் அத்தகைய புதல்விகளிலொருத்தியாக விளங்க வேண்டும். நீ இதுவரை இருந்துவந்த பிறந்த கத்தைவிட்டுப் பிரிவதால் ஏக்கம் கொள்ளவேண்டாம். நானும் உன் அன்னையரும், சகோதரரும் அடிக்கடி வந்து உன்னைக் கண்டு செல்வோம். ஆதலால் நீ எங்கள் பிரிவுக்கு வருந்தாது பிறந்தகம் புக்ககம் என்றவித்தியாசமின்றி உன் கணவரோடு இணிமையாக இல்லறம் நடத்தவேண்டும்.

முதலாவதாக நீ கற்புள்ளவளாக விளங்க வேண்டும். "கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை" உன் கணவரையன்றி வேறு ஆடவரைக் கருதாது அவர் சொல்லுக்கும் இஷ்டத்திற்கும் மாறின்றி அவருடன் பூவும் மணமும்போல் மனமொத்து வாழவேண்டும். "புல் என்றாலும் புருஷன் கல்லென்றாலும் கணவன்" என்றபடி. அவர் இயற்கையில் கொடியவராயிருப்பினும் உன் இன் சொற்களாலும் நன் நடத்தையாலும் அவரது மனத்தை மாற்றி நல் வழிக்குக் கொண்டு வர முயல வேண்டும். உலகில் உனக்குச் சர்வமும் அவரேயெனக் கொள்ள வேண்டும். கற்பு வாய்ந்த பெண்கள், நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்ற நான்கு குணங்கள் வாய்க்கப் பெற்றவர்கள். நாணம் என்பது வெட்கப்படுதல், பெண்கள் தம் கற்பைக் காத்துக் கொள்ள இக்குணம் இன்றியமையாதது. பெரியோர்களுடனும் ஆடவர்களுடனும் பேசும்போது லஜ்ஜைப்படுவதும், பிற ஆடவரைக் காணும்போது வெட்கித் தலை குனிவதும், நாணத்தின் பாற்படும். மடம் என்பது பேதமை, அறிவீனம் அல்ல. கல்வி அறிவு பெற்றிருந்தும், பிறர் முன்னிலையில்தான் அறியாதவள் போல் நடந்து கொள்வது, கடினசித்த மின்றி பிறர்துயர் காணும்போது உருகிய மனத்துடனிருப்பது. அச்சம் என்பது மனத்தைரியத்தை விட்டுப் பயப்படுவதல்ல. உலகப்பழிக் கஞ்சுவதும் அந்நியரைக் கண்டு பயப்பட்டவள்போல் விலகி நிற்றலுமே அச்சமாகும். அயல் ஆடவர்கள் சொல்லிலும், பழக்கத்திலும், அவர்கள் பரிசத்திலும் அருவருப்படைந்துப், அவர்களுடன் பேசப் பின் வாங்கியிருத்தலும் பயிர்ப்பாகும். இந்த நான்கு குணங்களும் ஒரு பெண்ணுக்கு அணிகலன் களாதலால் நீயும் அவைகளைப் பெறவேண்டும்.

குடும்பப் பொறுப்பு உனக்கு ஏற்பட்டவுடன் சிக்கனத்தைக் கையாண்டுவருதல் வேண்டும். வருவாய்க்கு மீறிச் செலவு செய்து உன்கணவரை கடனுக்கும் கஷ்டத்திற்கும் உள்ளாக்காமல் இருக்கமுயல வேண்டும். நீ உன்கணவரிடம், ஆபரணங்களையும், நல்லாடைகளையும், வாசனைத் திரவியங்களையும், வாங்கியளிக்கும்படி கேட்பதே கூடாது. அவருடைய விருப்பப்படியே யிருத்தல்வேண்டும். உன்கணவரின் நண்பர்களை உனது சகோதரர்களாகப்பாவித்து அவர்களையும் அன்போடு வரவேற்று உபசரித்தல் வேண்டும். அன்றேல் அவருடைய கோபத்திற்கும், வருத்தத்திற்கும் உள்ளாவாய். உனது மாமனார் மாமியாருக்கு கீழ்ப்படிந்துநட. அவர்களையும் முகங் கோணுதல் உபசரி. அவர்களுடனும் உன் கணவரிடத்தும் ஒரு போதும் எதிர்த்துப் பேசாதே. "மாமி மெச்சிய மருமகளில்லை" எனலக வழக்கம் கூறினும் மாமியார் உன்னை மெச்சா விடினும் இகழாதிருக்க அவருடைய விருப்பம் அறிந்துநட. மைத்துனர் நாத்திமார்களுக்கும் மனங் கோணாதுநட. புக்ககம் புகுந்த உன்னை நாட்டுப் பெண்தா

னே என்று நினைத்து அதிகாரம் செய்ய வேண்டு மென்றே வாதுக்கிழுத்தாலும் பதில்பேசாது மௌனவாயிருந்துவிடு "மௌனம் கலகம் நாஸ்தி."

உனது ஒழிவான நேரங்களில் மற்றப் பெண் களுடன் வீட்டில் கூட்டம் கூடி ஊர்வம்பு பேசா தே. அறிவு, ஒழுக்கம், போதிக்கும்படியான நல்ல புஸ்தகங்களையே வாசி. தையல்வேலை, பின்னல் வேலை போன்றவைகளைக் கற்று ஒழிவுநேரத்தை பயனுடையதாகச் செய்துகொள். சினிமா, டிராமா முதலிய கொட்டகைகளுக்குச் சென்று களிப்ப தற்கு உன்கணவரை வற்புறுத்தாதே. அவராக உன்னை அழைத்துச் சென்றால்சென்றுவா. இல்லே யேல் கிராமபோன் போன்ற வாத்தியக்கருவிகளில் G. E. 10751, 10752—நம்பர்கள் உள்ள கொல ம்பியா ரிக்காட்டுகளை வாங்கி போட்டு அப்பாட்டு களைக் கேட்டு ஆனந்தம் கொள். இன் னும் உனகணவரது அனுமதியுடன் நல்ல பக்திரச முள்ள கீதங்களைப் பாடக் கற்றுக் கொள். உன் சங்கீதஞானத்தால் உன் கணவரையும், மாமனர் மாமியார் முதலியவர்களையும் பக்திரசக் கீர்த்தனை களால் வசப்படுத்தலாம். ஆதலின் நீ அவர்களது மனதுக்கிசைந்த இனிமையான பாடல்களைப்பாடி அவர்களைக் களிப்புறச் செய்யவேண்டும். சிசு வைத்தியம், குடும்பவைத்தியம் கற்பிக்கும் நூல் களைவாசித்து உன்குடும்பத்தாருக்கு ஏற்படும் சா தாரண நோய்களுக்கு நீயே பரிகாரம் செய்யத் தெரிந்துகொள்.

நீ சிறு குழந்தையாயிருப்பதால் இன்னும் சில நற்போதனைகளை அறிவிக்கிறேன், அவைகளைக் கருத்தில் நிறுத்தி அதன்படி ஒழுகுவாயாக. தினந்தோறும் குளித்து சுத்தமான ஆடைகளை உடுத் திக்கொள். உனது வீடு வாசல்களை எப்பொழு தும் சுத்தமாக வைத்திரு. ஒருவரிடமும் கடன் வாங்காதே. உன்குடும்ப சம்பந்தமான விஷயங் களையும், இரகசியங்களையும் எவரிடமும் சொல் லாதே. எக்காரணத்தைக் கொண்டும் அன்னிய ஆடவர்களுக்குக் கடிதம் எழுதாதே. அதிகப் பேச்சும் உரத்த சிரிப்பும் அடிக்கடி இருத்தல் கூடாது. உனதுவாழ்மனையிலிருந்து தாய்மனைக்கு எந்தவஸ்துக்களையும் அனுப்பாதே. பொறுமை யில் பூமாதேவியாக இருந்து ஒழுகுதல் வேண் டும். பாழான முற்கோபம் ஒருபோதும் ஆகாது.

இறுதியாக நீ உன்கணவருக்கு அன்னமிடுவ தில் தாயையொத்தும், சிசு ரூஷை செய்வதில் பணிப் பெண்ணைப் போன்றும், ஆலோசனை கூறுவதில் மந்திரியைப் போன்றும், பொறுமை யில் பூமிதேவிக்கு நிகராகவும், கணவரை வசியப் படுத்துவதில் லட்சுமிக்கு நிகரான அலங்கார வனப்பு வாய்ந்தவளாகவும், உன்கணவர் பிறமாதரை இச்சியாதிருக்க சயன சிருகத்தில் வேசியைப் பே லவும் நடந்துக் கொள்ள வேண்டும். நீ இவ்வாறு நடந்து கொண்டால் உனது கணவரால் சிரோபூ ஷணமாகக் கருதப்படுவதன்றி உனது பிறந்தகத் திற்கும் பழிச்சொல் ஏற்படாது. ஆகையால் நீ இவைகளை ஞாபகத்தில்வைத்துக் கொண்டு அவை களின்படி நடந்துகொள்ள வேண்டும், நீ எக்கா ரணத்தைக் கொண்டும் பிறந்தகத்தை நாடுவது உனது செல்வாக்குக்கும் கௌரவத்துக்கும் குறைவாகும்.

உனக்கு நல்லறிவளித்து நல்லவழியில் நடப்பட்டு இல்லற வாழ்க்கையில் இகபரசுகத்தை மேம்பாட்டு டன் அடைய எல்லாம் வல்ல இறைவன் அருள்புரி வதுமன்றி நீ சகல சம்பத்துடனும், வானத்தின் நட்சத்திரங்களைப் போலவும், ஆபிரகாமின் சந்ததி களைப் போலவும் குழந்தைகளைப் பெற்றுஎன்றும் சிரஞ் சீவியாக நீடூழிகாலம் வாழ்க வாழ்க

இப்படிக்கு,
P T. Pillay.

: கடவுள் வணக்கம் :

இப்பூவுலகின் கண்ணுள்ள ஒவ்வொரு மதத்தினரும் கடவுள் ஒருவர் உண்டென்றும், சராசரங்களனைத்திற்கும் அவரே காரண கர்த்தாவென்றும், தம்மை முழு மனதுடனும் பூஜிக்கிறவர்களைக் கைவிடாது காத்து இரட்சிக்கிறவரும் அவரே என்றும் சொல்வர். ஆலயம் தொழுவது சாலவும் நன்று; என்ற பிரகாரம் தங்களுக்கென்று ஒவ்வொரு ஆலயங்களை ஸ்தாபித்து தங்களது ஜெபதபங்களைச் செய்தும் வருகின்றார்கள். இவைகளை நாம் உற்று ஆராயுமிடத்து எங்களில் அதிகப் பற்றுனோர் சுயநலம் கருதியே செய்து வருகின்றோம். எப்படியெனில், நாம் இவ்வுலகில் இருக்கும் வரைக்கும் நோய்பிணியின்றி சகல ஐசுவரியங்களுடனும் ஜீவிக்க வேண்டுமென்று முழுமுதல் கடவுளாகிய எப்பிராணை அல்லும் பகலும் பிரார்த்திக்கின்றோம். ஆனால் அவர் நமக்குச் செய்து வருகின்ற நன்மைகளுக்கு அவருக்குத் துதி ஸ்தோத்திரங்கள் செய்வது நம்மில் மிகச் சிலரேயாவர்.

நமது இனபந்துக்கள் அல்லது சிநேகிதர்கள் ஏதாகிலும் விலையுயர்ந்த ஒரு பொருளை நமக்குச் சன்மானமாக அளிக்கும்பொழுது நாம் எவ்வளவு நன்றியறிதலுடன் அதைப்பெற்றுக்கொண்டு அவர்களுக்கு எங்கள் வந்தனத்தைச் செலுத்துகின்றோம். இப்படியிருக்க ஒருவரும் நமக்கு அளிக்கமுடியாத மோக்ஷத்தை அளிக்க வல்லவரும் நமது ஆன்மாவையும சரீரத்தையும் எவ்வித இடையூறின்றிக் காப்பாற்றி வருகிறவருமாகிய அந்தக் கிருபாநிதியாகிய ஆண்டவனுக்கு நாம் எவ்வளவு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

நாங்களனேக தான தருமங்களைச் செய்கிறோம், நோன்பு இருக்கிறோம், வருஷா வருஷம் உற்சவங்கள் நடத்துகிறோம் என்று இதைவாசிக்கும் சகோதர சகோதரிகளில் அநேகர் நினைக்கக் கூடும். அதுவும் நல்லதுதான், ஆனால் கடவுளே நமக்கு எல்லா ஐசுவரியத்தையும் கொடுத்திருக்கிறார் அப்படியிருக்க நாம் அவருக்குக் காணிக்கை செலுத்துவதெப்படி ?

நம்மை இவ்வுலகில் சிருஷ்டித்து, வேண்டிய ஒவ்வொரு நன்மைகளையும் தந்து பாதுகாத்து வரும் ஈசனுக்கு நாம் படைக்கக்கூடிய காணிக்கை நமது இதயமாகிய கோவிலே. எங்கள் முழு இருதயத்தோடும் அவரில் அன்புகூர்ந்து, ஸ்தோத்திரங்கள் செலுத்துவதே அவருக்குப்பிரியம், காயுமானவர், பட்டினத்தார், இன்னும் அநேகம் பக்தர்களின் பாடல்களையும் நாம் கவனிப்போமாயின் ஆண்டவனின் திருவடிகளிலிருந்து சேவைபுரியத் தங்களுக்கு அருள் புரியுமாறு வேண்டினர்களேயல்லாது, இந்த உலகில் தாங்கள் ஐசுவரிய சம்பன்னராய் ஜீவிக்கவேண்டுமென்பதாக அவர்கள் விரும்பவில்லை.

நேயர்களே! நாம் கடவுளை என்னவிதமாய் வணங்கவேண்டுமென்பது பின்வரும் சம்பவத்தால் நீங்கள் யூகித்து அறிந்து கொள்ளலாம்.

சொற்ப நாட்களுக்கு முன்னதாக ஒரு இந்துக்கோவிலில் திருவிழா ஒன்று நடந்தது. திருவிழாவைப் பற்றி நான் நெடுகிலும் கேள்விப்பட்டிருந்தேனேயினும் போய் ஒருபோதும் பார்த்ததே கிடையாது. இந்த முறை நிட்சயமாகப் போய்ப் பார்க்கவேண்டுமென்று தீர்மானித்தவளாக, எனது சிநேகிதிகளாகிய ஸரஸ்வதி, லீலாவதி, கமலபாய் முதலியோருக்குத் தெரிவித்தேன். அவர்களும் அதற்கு ஆமோதித்தார்கள். நானும் லீலாவதியுமே கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்கள். ஒருவேளை திருவிழாப் பார்க்கச் சென்றால் மற்றவர்கள் என்னைப்பரிகாசம் செய்வார்களோ என்றும் நினைத்தேன். பார்க்கவேணும் என்னும் அவாவினால் துணிடப்பெற்றவளாக. எனது கணவரிடம் இது விஷயத்தைத் தெரிவித்தேன். " அவர், பெண்கள் கூட்டம் கூடி வேடிக்கை பார்க்கப் போகிற இடத்தில் என்னை என்னத்திற்கு கார் இருக்கிறதுதானே. டிரைவர் கவனமாகக் கூட்டிக்கொண்டு போவான். போய்ப்பார்த்து வாருங்கள் என்று சொன்னர். முற்காலத்தில் தானே பெண்கள் தனியச்சென்றால் மற்வர்கள் பரிகாசம் செய்வார்கள். தற்காலம் நவநாகரீகமான காலமானபடியால், ஒன்றையும் பற்றியோசியாமல் மத்தியானச் சாப்பாடனதும 2-மணிபோல் எங்களது பிரயாணத்தைத் தொடங்கினோம். போகும் வழியில் எங்களைப்போல் எத்தனையோ பேர்கள் வேடிக்கை பார்க்கிற நோக்கத்துடனும், சிலர் சுவாமி தரிசனத்திற்காகவும், வேறு சிலர் காவடிகளைச் சுமந்துகொண்டும், ஐஸ்கிரீம், அயர்பத்து, கச்சான், முறுக்கு, மசாலைவடை, கண்ணாடி வளையல், வெற்றிலை முதலிய பொருட்களையும் இன்னும் வேறு தின்பண்டங்களையும் விற்று அதிகம் லாபமடையலாம் என்னும் நோக்கத்துடன் தங்கள் சிரமத்தையும் பகல் வெய்யிலின் கொடுமையையும் பாராமலும் எத்தனையோ பேர் சென்றார்கள். ஸரஸ்வதி பல தடவைகளிலும் திருவிழா பார்த்தவளானபடியாலும் சாதுர்யமாகப் பேசத்

தக்கவளானதாலும், அவளே ஒவ்வொரு விஷயங்களைப்பற்றியும் விபரமாக எடுத்துக்கூறினாள்.

நாலுமணியளவில் கோவில் வீதியை அடைந்தோம். எங்குபார்த்தாலும் விதவிதமான கார்கள், பந்தயத்திற்காக ஆயத்தமாய் நிற்கும் அசுவங்கள் மாதிரிக் காணப்பட்டன. எங்களுடைய காரையும் ஓர் இடத்தில் நிற்கவைத்துவிட்டு, ஸரஸ்வதி முன்செல்ல நாங்கள் மூவரும் அவளைப் பின்தொடர்ந்து செல்லலானோம். எங்களைக் கண்டதும் அங்குள்ள இந்துச் சகோதரர்கள் எல்லாரும் வழிவிட்டுக் கொடுத்தார்கள். அவர்களெல்லோரும் ஒரே மாதிரியாக வெள்ளை வேட்டியும் சால்வையும் அணிந்திருந்த படியால் பார்ப்பதற்கு ஒழுங்காயும் அழகாயும் காணப்பட்டார்கள். நாங்கள் கிறிஸ்தவர்களாக இருந்துகொண்டு இவ்வாறு வந்ததைப்பற்றி பரிகாசம் பண்ணக்கூடும் என்று லீலாவதியும் நானுமாக மெதுவாய் பேசினபடியே சென்றோம். இப்படியாகச் சில நிமிஷங்கள் சென்றதும் நமது இந்துச் சகோதரிகள் நிற்குமிடத்தை அடைந்தோம். அங்கு நான் கண்டகாட்சியானது என்னை அவர்கள் கிட்ட செல்வதற்கு இடங்கொடுக்கா வண்ணம் ஸரஸ்வதியைக் கோபிக்கவும் ஏவிற்று. வாசகர்களே! நீங்கள் என்ன நினைக்கின்றீர்களோ?

ஸரஸ்வதியின் ஏவுதலினால் சாதாரணமான பட்டாடைகளையும் கழுத்திலும் கைகளிலும் ஒவ்வொரு நகைகளை அணிந்ததினாலுமே, என்னை அவ்விதம் செய்ய ஏவிற்று. ஏனெனில் எங்களைப் போலவே அங்குள்ள சகோதரிகளிலும் அணிந்திருப்பார்களென்று நினைத்தேன். அப்படிக்கின்றி அவர்களில் அதிகப்பற்றுனோர் ஜரிகை வேலைப்பாடுகள் அமைந்த பட்டுப் பீதாம்பரங்களையும், கழுத்திலும், கைகளிலும் நிறைய ஆபரணங்களையும், தோள்வரைக்கும் கையுள்ள சட்டைகளையும் அணிந்திருந்தார்கள். இப்படியாக நான் சற்றுமன வருத்தமாக நிற்கும் சமயம், ஸரஸ்வதி எனது கையைப் பிடித்து இழுத்த வண்ணமாக, "ஸரோஜா, என்ன யோசனை பண்ணிக்கொண்டு நிற்கிறாய், வாநாம் அவர்களிடம் நெருங்கிச்சென்று இன்னும் சில விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாம் என்பதாகச்சொல்லி என்னை அழைத்துச் செல்லலானாள். ஆனால் அவர்களுக்குச் சமீபமாகச் செல்ல நான் இடம் கொடுக்கவில்லை. ஸரஸ்வதி, லீலாவதியையும் என்னையும் ஒருமர நிழலின் கீழ்நிற்க வைத்துவிட்டு, கமலபாயையும் அழைத்துக்கொண்டு சுவாமி தரிசனத்திற்காக கோவிலுக்குள் சென்றாள்.

லீலாவதியும் நானும் இவர்களிருவரும் செல்லும் திக்கை நோக்கிய வண்ணமாகவே நின்றோம். இப்படியாக நாங்கள் நிற்கும் சமயம் கமலபாயும் ஸரஸ்வதியும் தங்கள் இருகரங்களையும் கூப்பியவண்ணமாகச் சிரத்திலே வைத்துத் தாழவிழுந்து சாஷ்டாங்கமாக வணங்குவதைக் கண்டோம். அவர்களைப் போலவே வேறு சில சகோதரிகளும் வணங்கினார்கள். ஆனால் சிலர் மாத்திரம் அப்படியில்லாமல் நின்ற நிலையில், தங்கள் கரங்களைத் தன்னும் சிரத்தில் வைக்கப்பயந்தவர்களாக, நமஸ்காரம் செயகிற வண்ணம் காணப்பட்டார்கள். எல்லோரும் ஒரே மாதிரியாகத் தாழவிழுந்து வணங்குவார்கள் என்பதுதான் என் அபிப்பிராயம். இப்படியாக அவர்கள் செய்வதைக் கண்டதும், ஸரஸ்வதியும் கமலபாயும் வந்ததும் அதன் உண்மையை அறிய எண்ணி அவர்களின் வருகையை எதிர்பார்த்திருந்தேன். அதிக நேரம் காக்க வைத்திட்டோமா? வேடிக்கை யெல்லாம் பார்த்தாய் விட்டதா? என்று கேட்டபடி ஸரஸ்வதியும், கமலபாயும் வந்தார்கள். "ஆம். வேடிக்கை எல்லாம் பார்த்தாய் விட்டது. ஒன்று கேட்க விரும்புகிறேன். அதாவது நீங்கள் வணங்கிய பிரகாரம் சில சகோதரிகள்தான் வணங்கினார்கள், மற்றவர்கள் நின்ற நிலையில் என்ன செய்தார்கள்? அவர்களுக்குக் கால் மடக்க முடியாத வருத்தம் ஏதாவது உண்டோ? என்றேன்.

ஸரஸ்வதி:—நானும் உன்னை ஒரு விஷயம் கேட்கிறேன் அதற்கு விடையளி அதன் பிறகு நீ கேட்ட கேள்விக்கு உத்தரம் சொல்வேன் என்றாள். (இப்படிக் கேட்டதும் எனக்கும் மனசுக்குள் கொஞ்சம் பயந்தான். எங்கள் கிறிஸ்தவ மதத்தைப்பற்றி ஏதாகிலும் கேட்டுவிடப் போறாளோ, என்று எண்ணியவாறு.) நீ அவ்வளவு சிரத்தையுடன் கேட்கும் விஷயம் யாது என்றேன்.

"ஸரோஜா! நான் உங்கள் கிறிஸ்தவ ஆலயத்திற்கு, ஒருமுறை வந்தேன். போதகர் ஜெபம் பண்ணக் கடவோம் என்று சொல்லும் பொழுது, நீங்கள் எல்லோரும் நெற்றியில் கைவைத்த வண்ணமாக உட்கார்ந்த படியே இருந்தீர்களே யல்லாது, முழந்தாள் படியிட்டோ, அல்லது, எழுந்து நின்றோ ஏன் ஜெபிக்கக் கூடாது என்றாள். அவள் கேட்ட கேள்விக்கு என்ன பதில் சொல்வதென்று சற்று யோசித்து, அவளை நோக்கி, ஸரஸ்வதி! உனக்கு இது விஷயம் தெரியாதா? எங்கள் மெதடிஸ் சபையிலுள்ளவர்களுக்கு ஆலயத்திற்குச் சென்றவிடன், தாங்கமுடியாத தலைவலி உண்டாய் விடுகிறது. ஆனால் இதை ஒருவருக்கும் சொல்லவேண்டாம் பரம இரகசியமாய் இருக்கட்டும். ஆனால் நீ மற்றக கிறிஸ்த ஆலயங்களைப் பார்க்கவில்லைப்போலும். அவர்களெல்லோரும் முழந்தாள்படியிட்டவண்ணமாகத் தங்கள் இருகரங்களையும் கூப்பி ஆண்டவனைத் தொழுகிறார்கள் என்றேன்.

ஸரஸ்வதி:—மிகவும் நன்று இங்கு நிற்கும் சில ருக்கும் கோவிலுக்குள் வந்தவுடன் காலில் வாதக் குணம் உடனே வந்துவிடும் இதற்கு என்ன மாற் றுமருந்தோ தெரியவில்லை என்றாள்.

சகோதரிகளே! கடவுளை வணங்க என்று ஆல யத்திற்குச் செல்லும்போது அளவுக்கு மிஞ்சின ஆபரணங்களை அணியாமலும், விலையேறப் பெற்ற பட்டாடைகளைத் தரியாமலும் போனால் அந்த வியாதி அறவே ஒழிந்து விடும். முதலாவது, அதிகம் நகைகளை அணிவதால் தாழ விழுந்து வணங்கும் பொழுது திருடர் யாராகிலும் நகை களைப்பற்றிக் கொள்வார்களோ என்னும் பயம் மனசில் தோன்றும். இரண்டாவது தங்கள் விலையேறப்பெற்ற சேலைகள் அழுக்குப்படிந்து விடும். அப்படியானால் நாம் கடவுளை மனசில் நினைத்து அவர் நமக்குச் செய்த நன்மைகளுக் குத் துதி செலுத்துவதெப்படி? நகைகளின் எண் ணமும் சேலையின் எண்ணமும் மனசில் இருந் தால் கடவுளை நினைக்க மனதில் இடமில்லையே. சகோதரிகளில் சிலர் நினைக்கக்கூடும். எங்களி டம் உள்ளதை நாம் அணிகிறோம் அதைப்பற்றி மற்றவர்களுக்கென்ன பேச்சு என்பதாக உங்களை அப்படி உடுத்த வேண்டாம், நகை போடவேண் டாமென்றுந் சொல்லவில்லை. உங்களது இஷ்டம் போல் நடந்துகொள்ளலாம். ஆனால், இடம் அறிந்து அதற்கேற்றவிதமாக நடத்தல் அவசியம். சிலர் சாவுவீட்டிற்கும் கூட பட்டாடைகளையும் அதிக நகைகளையும் அணிந்து செல்வதையும் பார்த்திருக்கிறேன். அது எவ்வளவு மதியீன மும் வெட்கமுமான காரியம் என்பதை அவர்கள் உணர்ந்தார்களில்லை.

ஆனபடியால் கடவுள் வணக்கத்திற்கென்று செல்லும்பொழுது சாதாரண பட்டாடைகளோ அல்லது கழுவத்தக்க சேலைகளைத் தரித்துக் கொண்டால் மிகவும் நன்று. சகோதரிகளுக்கும் இப்படியான வியாதியும் வராது என்றேன்.

கமலபாய்:—உனது பிரசங்கம் நன்றாய் இருக் கின்றதே, பிரசங்கபீடம் ஒன்றுதான் குறைவு என்று கேலி செய்தாள்.

லீலாவதி:—நல்லது நாம் வந்த காரியம் எல் லாம் விட்டு வேறு அலுவல்களில் சென்று விட் டோம், வாருங்கள் நாம் சென்று கோவிலின் வெ ளிவீதி பார்க்கலாம் என்று எங்களை அழைத் துச் சென்றாள். நாங்கள் கோவிலின் இடதுபுற மாகச் செல்லலானோம். அங்கே எத்தனையோ ஸ்திரீகள் கோவிலினுள் செல்ல இடமின் மையால், வெளி விதியில் நின்றவண்ணமாகத் தங்கள் பிரார்த்தனையைச் செலுத்தலானார்கள். இவ்வண்ணமாக நாங்கள் ஒவ்வொரு காட்சிகளை யும் பார்த்துச் சென்றுகொண்டிருக்கும் சமயம், ஜன நடமாட்டம் அதிகம் இல்லாத இடத்தில், ஓர் ஏழைச் சகோதரி மரநிழலின் கீழ் நின்றவண் ணமாகத் தன் கரங்களைக்கூப்பி ஏதோ சொல் வதை நான் கவனிக்கலானேன். அவள் பார்வை க்கு ஏழையாய்க் காணப்பட்டாலும், அவளின் வதனம் களங்கமற்றதாகவும், லட்சுமிகரம்பொருந் தியதாகவும் காணபபட்டது. அவள் என்ன செ ய்கின்றாள் என்பதைக் கவனிக்கும்பொருட்டு அவள் நிற்கும் திக்கை நோக்கி நடக்கலானேன். ஸரஸ்வதி அங்கேயுள்ள ஒவ்வொரு காட்சிகளைப் பற்றியும் எடுத்துக்கூறிக் கொண்டு சென்றபடி யால் அவர்கள் மூவரின் புலன்களும் ஒருமனப் பட்டிருந்தன. அந்த ஏழைச் சகோதரியினிடம் நான் நெருங்கியதும், அவளின் பிரார்த்தனைக்குப் பங்கம் வரா வண்ணம், அவளின் பின் புறமாக நின்று அவள் செய்வதைக் கவனிக்கலானேன். கிருபாநிதியாகிய எம்பிரானைத் துதிக்க அவளது நாவானது தலைப்பட்டது. பின்வருமாறு பாடலா னாள்.

இருளகலவே பிறந்த பெருமானே!

இராகம்—செஞ்சுருட்டி தாளம்—கண்டஜாதி.

பரமனருளால் நிறைந்து பணியுமடியார் மகிழ்ந்து
பரகதியினைசை தந்து வருவோனே!
வரமவைகளே மிகுந்த சரண நிலையே விரும்ப
பமபதமீது சிந்தை தருவாயே!
தரணிகளெல்லாம் பணிந்த திருமுனவராலுவந்த
சகல மறையோத வந்த மறையோனே!
சரணமுனையே அடைந்து தருமநெறி மிதுவந்து
தப ஜப தியானமுந்த அருள்வாயே!
பெருமை யுளமே பிளந்து திருவடியிலே கலந்து
ஒருமை யுளமாக நின்று சிதறுமல
பெருமையுடனினைந்து அருள தபமாய்
[விளங்கி
அனுதினமுமே மகிழ்ந்து பணிவேனே!
கருணை பெறவே பணிந்து கமழுமலர் போல
[ணிந்து
கணமுமறவாத சிந்தை தரவேணும்;
அருவுருவமாக நின்று திருவுருவமே யணிந்து
இருளகலவே பிறந்த பெருமானே!

என்ற இந்தப் பாடலைக் குயிலினுமினிய குர லினால் அதிபய பக்தியோடு பாடலானாள். இந்த அற்புதமான காட்சியைக் கண்ட நானும் எல்லா வற்றையும் மறந்து எனது கரங்களைக் கூப்பிய வண்ணமாக, அந்த ஏழைச் சகோதரியின் பாட லைக்கவனிக்க லானேன் உண்மையைக் கூறுமி டத்து அவளின் பக்திரசம் பொருந்திய பாடலா னது அவளுக்கு என்னை அடிமையாக்கியது

எனலாம். மற்றவர்கள் என்னைப்பற்றி என்ன நினைத்தார்களோ தெரியவில்லை. ஆனால் எனது சிநேகிதிகள் மூவரும் எனக்குப் பின்புறமாக வந்துநின்று, ஸரோஜா! வெகு நேர்த்தியடி அம்மா!! நீயும் சுவாமியைப்க் கும்பிடுறுட்போல் இருக்கிறதே என்று கேலி செய்தார்கள்.

நான்:—அப்படியல்லச் சகோதரிகளே! நான் பார்த்த காட்சிகளெல்லாவற்றிலும், இந்த ஒரே காட்சிதான்.

என்னைப் புனிதவதியாக்கிற்று. எங்களது ஆலயங்களிலும் இப்படியான பாடல்கள் பாடினதேயில்லை. பரம்பொருளைப் பாடல்களினால் துதிப்பதே நல்லது என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அநேகர் தங்கள் வாயைத்திறந்து பாடல்களினால் ஆண்டவனைத் துதிக்க வெட்கப் படுகின்றார்கள். இதுவும் நாகரீகத்தில் ஒன்று என்று நினைத்தார்கள் போலும். என்ன மதியீனம். பட்சிசாலங்களைக் கவனித்துப் பாருங்கள் அதிகாலையில் இருட்டோடே எழுந்து அவைகள் ஆண்டவனைத் துதித்துப் பாடுவதை நாம் காணலாம். அப்படியே வண்டினங்களும் ஒவ்வொரு பூப்பூவாகத் தாவி ரீங்காரம் செய்தவண்ணமாக ஆண்டவன் தங்கள் பொருட்டாகப் படைத்த புஷ்பங்களுக்காக அவைகள் நன்றி செலுத்துவதை நாம் காணலாம். இப்படியிருக்கத் தனது புத்தியினாலும் வல்லமையினாலும் உலகத்தையே ஆட்டவைக்கும் மனுஷனவன் எவ்வளவு தூரம்தான் கடவுளைத் துதிக்கக் கடனைப்பட்டவன் என்பதை உணர்ந்தானில்லை, என்று என் மனசில் ஏற்பட்ட சந்தோஷத்தினாலும் பக்தியினாலும் உரைத்தேன். எங்கள் நால்வரையும் கவனித்த அந்த ஏழை மாது, ஆச்சரியப்பட்டாளெனினும் சற்று அப்புறம் விலகி எங்கள் சம்பாஷணையைக் கவனிக்கலானாள்.

ஸரஸ்வதி:—அவளைக் கிட்ட வரும்படி அழைத்து, அவளை நோக்கி, "நீ யாரம்மா, எங்கிருந்து இவ்விடம் வந்தாய், உனது தொழில் என்ன" என்ற கேள்விகளைக் கேட்டாள்.

"தாயே நான் இருப்பது இங்கிருந்து நாற்பத்தைந்து மைல்களுக்கப்பாலுள்ள றப்பர் தோட்டத்தில், எனக்கு இனத்தவர்கள் கிடையாது என் புருஷனும் பரமபதமடைந்தார். எனக்கு ஒரே புத்திரன்தான் உண்டு. அவனும் சொற்பகாலமாக நோய்வாய்ப்பட்டிருக்கிறான். எல்லாவித மான வைத்தியமும் செய்தாய்விட்டது. அவன் ஒருவனை நம்பியே நான் உயிர் வாழ்கின்றேன். ஏதோ புத்திர வாஞ்சையினால் இவ்வளவு தூரம் கால் நடையாக எனது கஷ்டத்தையும் பாராமல் சுவாமி தரிசனத்துக்காக வந்தேன். அந்தக் கருணைவள்ளல்தான் என்குழந்தைக்கு ஆயுளைப் போட்டுச் சுக பெலத்துடன் வைக்கவேணும் என்று கண்ணீர் பெருகியவாறு கூறினாள். அவளின் பரிதாபமான வார்த்தைகளைக் கேட்ட எங்கள் மனசும் கலங்கலாயிற்று. உலகில் துப்பற்றவர்களுக்கே அடிக்கடி துன்பம் நேரிடுவது சகஜம். கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

எல்லாம் வல்ல இறைவன் உனக்குத் துணைபுரிவாராக. கவலைப்படாதே என்று அவளுக்குத் தேறுதல் கூறி சொற்ப பணமும் அவள் கையில் கொடுத்து இரவு எட்டுமணிபோல் வீடுவந்து சேர்ந்தோம்.

"ஸரோஜா"

தமிழ் இலக்கண நூல்கள்

இலக்கணமென்பது தமிழில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐவகைப்படும். இதில் எழுத்து மொழிக்குக் காரணமாயுள்ளது. அது எண் பெயர் முதலிய பத்து வகைப் பிரிவினையுடையது. இவைகளைப் பற்றி விவரிக்கும் நூல்களுக்கு இலக்கண நூல்கள் என்று பெயர். எல்லா பாஷைகளிலுமுள்ள இலக்கண நூல்களைக் காட்டிலும், செந்தமிழ் மொழியாகிய நம் தாய் பாஷையில் உள்ளவைகள் அதிக சிறப்புடையனவாயும், சுவையுடையனவாயும் விளங்குகின்றன. அகத்தியராகிய பெரியோர்களால் இயற்றப்பட்ட இந்நூல்கள் தமிழில் பல உள: இவ்விலக்கணங்கள் சில பகுதியையேனும் முழுப்பகுதியையேனும் சுருக்கியும், விரித்தும் உரைக்கும். அந்நூல்களில் முக்கியமானவை சில கீழ் வருமாறு:—

(1) அகத்தியம்:— இதை இயற்றினவர் சிவபெருமானிடத்தில், இத்தென் மொழியைக் கேட்டமுனிக்கரசராகிய அகத்தியர். தமிழிற்கு இன்நூலே ஆதி இலக்கணம். இது எழுத்து, சொல், யாப்பு, அணி, பொருள் முதலிய அடங்கிய நூல். இது பேரகத்தியம், சிற்றகத்தியம் என இருவகைப்படும் என்று ஆன்றோர் கூறுகின்றனர்.

தற்போது இது வழக்காறற்றது, ஆயினும் பேரகத்தியத் திரட்டு என அச்சிடப்பட்டு வழங்கி வருகின்ற நூலிலுள்ள சூத்திரங்கள் இதிலுள்ளவைகளே.

(2) தொல்காப்பியம்:—தொல்காப்பிய ரிதை இயற்றியவர். இவர் அகத்தியர் மாணவரில் ஒரு

யர். இவ்வாசிரியருக்கு "சேனாவரையர்" எனப் பெயருண்டு. இந்நூலில் பஞ்ச இலக்கணங்களும் நிரப்பி யிருக்கின்றனர். இது 1612 சூத்திரங்கள் கொண்டது. இத்தொல்காப்பியம் அருமையிலும், பழமையிலும், சூத்திரப் பொருட் செறிவிலும், நயத்திலும் சிறந்து விளங்குகிறது. இதற்கு உரை கூறினவர், சேனாவரையர், கல்லாடர், இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், முதலியவர்களாம். இடைச் சங்கத்தாராலும் கடைச் சங்கத்தாராலும் இது நன்று புகழப்பட்ட நூல். உரைகளுள், சொல்லதிகாரத்திற்கு மாத்திரம். சேனாவரையர் உரையே சிறப்பாய் வழங்குகின்றது: கல்லாடர் செய்த உரையானது இன்னும் அச்சிற்கு வரவில்லை. எட்டியற் றலைந்து தொடக்கின்றது. பொருளதிகாரத்தின், இறுதிப் பகுப்பிற்கு மாத்திரம் பேராசிரியருடைய உரை உச்சிட்டப்பட்டிருக்கிறது.

தவிரவும் திருவாவடுதுறை ஆதீனம் வேலப்ப தேசிகரின் சிஷ்யராய், காஞ்சிபுராணம், கம்பராமாயணம், சோமேச வெண்பா முதலிய நூல்களைச் செய்து சமாதியடைந்த சிவஞான முனிவரென்பவர் இந்நூலின் பாயிரத்திற்கும், முதற் சூத்திரத்திற்கும், அருமையாகவும், விரிவாகவும், தெளிவாகவும் ஒரு உரை செய்துள்ளார்.

(3) இறையனாரகப் பொருள்:—கடைச்சங்கப் புலவருள் ஒருவரான இறையனார் என்பவர் இதன் ஆசிரியர். மதுரையில் எழுந்தருளி இருக்கும் சொக்கலிங்க மூர்த்தியே இவரென்பர். இந்நூலுக்கு உரை, மூவகைப்பிள்ளையர் என்று சொல்லப்படும் உப்பூரிகுடிகிழார்மகனார் உருத்திரசன்மனார்முன்னிலையில் அரங்கேற்றப்பட்டது; அறுபது சூத்திரங்கள் கொண்டது; கடைச்சங்கத்து புலவர் பூண்டு விளங்கின சோமசுந்தரக் கடவுளின் செய்யுளுக்குக் குற்றம் கூறின நக்கீரனார் இதற்கு உரை செய்துள்ளார். அதுவும் ஒப்புயர்வற்ற பொலிவும், நுட்பமும், தெளிவும் உடையது. இது இறையனாரகப் பொருளை விளக்கும்.

(4) நன்னூல்:—இது சனகாபுரம்பவணந்தி என்னும் சைநமுனிவராற் செய்யப்பட்டது. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணிமுதலிய ஐந்திலக்கணங்களும் நிறைந்த நூலென்பர் இதை. இந்நூல் பொருளிலக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணம் மூன்றும் தற்காலம் கிடையாது ஒழிந்தன. இது நம்மனோர் செய்த தவப்பயனே. எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என்கிற இரண்டு அதிகாரங்களும் செவ்வனே பதினாறு சூத்திரங்களாகக் கூறி விளக்கப்பட்டிருக்கின்றன. தொல்காப்பிய முதலிய நூல்கள், கற்று வல்லுனராயுள்ளார்க்கேயன்றி, ஏனையோர்க்கு எளிதில் அறிப்படுவனவல்ல. இந்நன்னூலோ அவ்வாறன்று. மானவரும் எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய தன்மையில் இருக்கின்றது. இது நிற்க, பவணந்தி முனிவர் பிற்கூறிய மூன்று இலக்கணங்களையும் இயற்றினர் என்பது அவரருடைய துணிவு. இதன் உண்மையை வல்லார் வாயுக் கேட்டுத்தெளிக. சைன அரசனை மயிலேமாலும், ஆசிரிய நிகண்டு இயற்றிய பாவாடை வாத்தியார் என்கிற ஆங்கிலப் புலவரும், இலக்கணக் கொத்துக்காரராகிய சங்கர நமச்சிவாயரும், சிவஞான சுவாமிகள் முதலியவரும் இந்நூற்கு உரை இயற்றியுள்ளார். தற்காலத்தில் இந்நூலாகிய நன்னூல் நன்கு மதிக்கப்பட்டு வருகின்றது. இதன் பெருமையைச் சற்றேறக் குறைய 200 வருஷங்களுக்கு முன்னிருந்த சாமிநாத தேசிகர் என்னும் சிறந்த தமிழ்ப் புலவர் தாமியற்றிய இலக்கணத்தில்,

"முன்னைமொழியப் பின்னோர் பலரினுள்
நன்னூலார் தமக்கு எந்நூலாரும்
இணையோ வென்னும் துணிவே மன்னுக"

எனக்கூறி இருப்பது இங்கு கவனிக்கற்பாலது.

(5) வீர சோழியம்:— பொன் பற்றியூர் புத்தமித்திரனார் இயற்றியது. இது பஞ்ச இலக்கணங்களையும் சுருக்கிக்கூறும் ஒரு நூல். அக்காலத்தில் அரசாண்ட வீரசோழன் என்னும் மன்னன் பெயரால் இது செய்யப்பட்டதாதலால் இப்பெயர் பெற்றது. இதன பெருமையைத் தீழே காட்டியுள்ள ஒரு மேற் கோளால் தெரிந்து கொள்க.

திகழ் சக்கரம்:—திகட சக்கரம் என்று புணர்ந்தனமைக்குப் புலவர்கள் மறுக்க, அப்பொழுது கச்சியப்ப சிவாசாரியருக்கு முன்பாக குமரக் கடவுள் அப்புலவர்களுக்குச் சமாதானம் கூறமாறு இவ்விலக்கண நூலைக்கொண்டுவந்து "நான்கொடு மூன்றொன்பதாமுயிரின் பின் நவ்வருமேல்" என்ற சூத்திரத்தை காட்டினரென்பர். இது பெருந்தேவனார் செய்த உரையோடு கூடியது.

(6) நேமி நாதம்:— இது களத்தூர்—குணவீர பண்டிதர் இயற்றியது. நேமி நாத தீர்த்தங்கரர் பெயரால் அவர் இயற்றின படியால், இதற்கு "நேமி நாதம்" எனப் பெயர் வந்தது. நன்னூல் போல, எழுத்தும் சொல்லும் அமைந்த இலக்கண நூல் இது. ஆனால் வெண்பாவினால் அமைந்தது. இந்த வெண்பாக்கள் சுருங்கச் சொல்லல் முதலிய பத்து அழகோடு கூடி விளங்குகின்றன. இன்னூலை "சின்னூல்" என்றும் கூறுவர்.

இதைச் சென்னூலுரைத்த குணவீர பண்டிதன் "சேர்பதியும்" என்னும் தொண்ட மண்டல சதகச் செய்யுளாலறிந்து கொள்க.

(7) புறப்பொருள் வெண்பா மாலை:—ஆசிரியர் ஐயனரிதனர், அகஸ்தியர், மாணவராகிய முனிவர், அதங் கோட்டாசான், தொல்காப்பியர், செம்பூட் சேய் முதலிய பன்னிருவராலும் கூறப்பட்ட புறப்பொருளுக்கு, இது வழிநூலாகும். பொருள் இலக்கணத்தில் ஓர் பகுதியைக் கூறுவது இது. மாகலூர் கிழார் செய்த உரை ஒன்று இதற்குள்ளது.

(8) தண்டி அலங்காரம்:—இயற்றினவர் தண்டி ஆசிரியர். இவரை அம்பிகாபதியின் புத்திரன் என்றும் சிலர் சொல்லுவர். அணி என்னும் தென்மொழியானது, வடமொழியில் அலங்காரம் என்று கூறப்படும். இது தண்டி அலங்காரம் என்னும் வடமொழியிலுள்ள நூலைப்பின்பற்றியது. இது அணி இலக்கணத்தை விரிவாகத் தெளிவிக்கும் ஒரு நூல். இந்திரவிமான மாலையிலாசிரியராகிய சுப்பிரமண்ய தேசிகர் இதற்கு உரையெழுதியுள்ளார். இதற்குத் தற்கால உரைகள் அநேகம் உண்டு.

(9) இவையேயன்றி யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை, மாறனலங்காரம், பிரயோக விவேகம் முதலிய நூல்களும் உலக வழக்காற்றுகளான—வீரமாமுனிவர் இயற்றிய தொன்னூலும், முத்துவீர உபாத்தியாயர் இயற்றிய ஐந்திலக்கணங்களையும் கூறும் முத்துவீரியமும், திருப்புகழ் சுவாமி என்கிற முருகதாச சுவாமிகள் இயற்றிய புலவர் இலக்கணத்தோடு கூடிய அறுவகை இலக்கணமும் உள்ளன.

இவ்வகை நூல்கள் நிறைந்த நம் தமிழ்ப் பாஷையின் பெருமையை அறிந்து அவைகளைக் கண்டு, நம்வழிகாட்டியின் சகோதர, சகோதரிகள் அப்பாஷையை அடையுமாறு கடவுளைப் பிரார்த்திக்கின்றனன்.

C. பொன்னுச்சாமி.

முன்னேற்றம்

சீர்திருத்தம்: நாகரீகமடையும் வழிகளைத் தேடியடைதல். மக்கள் பல்துறைகளிலும் உழைத்தல் தம்மைச் சீர்திருத்தி நீதியைக் கைப்பற்றும் பொருட்டேயாம். சீருடையான் திருத்தத்தின் திரட்சியாவான். அவன்பால் கோபமிராது, களவு இராது, பிரியாதுகளிரார். இவர் வதியும் நாட்டிற் கோடேன்? கக்கேரியேன்? இவர்கள் மனச்சான்று வழிநின்று பணியியற்றும் நீதிபதிகள். நீதியைச் சம்பாதித்தல் சாலவும் சிறந்தது. நீதியில்லான் சீர்திருந்தியவனாகான். முன்னேறுவதற்குப் பதிலாய் இவன் பிற்போர்க்களனாவான். இவன் மகன் என்னும் நாமமிழந்து மிருகமாகின்றான். இவன்பால் பொய், பொறாமை, கோள், சண்டை தாண்டவமாடிச் சீவிய காலம் முழுவதும் நீதிமன்றத்தில் பிரியாதுடனிருபபான். இவர் பிறப்பின் பலா பலனை அடையும் நாளேதோ அறியோம்.

மகன் சீர்திருந்தி முன்னேறுவதற்கு அனேக முறைகளைச் சாதனையாகப் பெரியோர் கூறியுள்ளார். அவை கல்வியின் விரிவு எனலாம்.

கல்வி

கல்வியே மகனுக்குக் கண்ணொளியைத் தருவது, மனவிருளைக் கடிவது, பாதைத் துடைப்பது, அறிவமைதியை ஓட்டுவது, சீருடையவனுக்குவது, கீர்த்தியைத் தருவது, அடக்கத்தை அருள்வது மன அமைதியை மல்குவது, சான்றோனைச்சுவது கற்றோர் யாவரும் கல்வியாளராவாரா; அன்று! அன்று! கற்பதை உணர்ந்து மனதிற்பதித்து அதன்படி தனது வன்மையை நீக்குபவரே கல்வியாளர்; மனச்சான்று துளங்கியவரே கற்றோர்; பிறர் துன்பங்களை கண்டிரங்கி அத்துயர் களைபவர்களே கற்றோர்.

முன்னேற்றமளிக்கும் கல்வி பல துறைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது, நூல்ரூபமானபோதனை பத்திரிகை வாயிலாகவும் திருத்தம், கழகவாயிலாயியலும் சிறப்பு, நாடகரூபத்தாலானதிருத்தம், பிரசாரகர்களாலேர்படும் திருத்தம். இவையாவும் கல்வியின் பிரிவின்பாற்பட்டன.

நூல்கள்: இன்று அனேகநூல்கள் வெளியாகின்றன. அவையாவும் அறிவை யூட்டுவனவாகா. மக்கள் படிக்கும் நூல்கள்மீது எச்சரிக்கைவேண்டும். அறிவாளிகளாலான நூல்களை கையிலெடுக்கத் தகுந்தன. நாவல்கள் கட்டுக்கதைகள் மன அமைதியைக் குலைப்பன. ஆன்றோரால் ஆக்கப்பட்ட நூல்கள் போன்று இன்று சிறப்புடனியற்றுபவர் சிலரே. இவர்களின் வெளியீடுகளேயாம் படிக்க உகந்தன. அறிவு எமது மொழியிற்தான் உண்டு என்பதுமன்று. அறவோன் எம்மொழியிலெழுதினுமென்? யாம் அவ்வறத்தைப் படிக்கவேண்டும், ஆங்கிலக் கவி வல்லவரின் சீரிய இலக்கிய நாடகச் சிறப்பும், அறவுரையும் ஆங்கிலேயருக்

குத் தனிமையாய்ச் சொந்தமன்று. உலக முழுவ திற்கும் அவ்வறம் சொந்தம், இந்திய இலக்கிய, ஞான நூல்கள் இந்தியருக்குச் சொந்தமன்று. இதுவும் உலக முழுவதிற்கும் உரியது. ஆனல் யாம் தமிழர். எமது தமிழில் எமக்கு இன்பம் பிறப்பது போன்று மறுமொழிகளி லெழல் அரிது. "யாம் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவதெங்குங் காணேம்" பாரதியார். என்பதை ஒக்க யாம் இன்புறலாம். தமிழ்ப்பழம் நூல்கள் ஒன்று இரண்டா? பல, பற்பல. அத்தேனைக் கசக்கிப் பிழிந்து பருகுவது எமது கடன். பின் புற மொழிகளின் ஆழத்தை அளக்கலாம். இதனல் யான் பிறமொழி கற்றல் தவறு எனவில்லே.

உ. பத்திரிகை: நூலாசிரியன் எத்தன்மை ஆழமான கல்வியாளராக வேண்டுமோ அத்தன்மை அறிவும் கல்விப் பெருக்கமும் பத்திரிகாசிரிய னுக்கு வேண்டும். ஆசிரியன்மார் பிழைப்பின் பொருட்டுப் பத்திரிகை நடத்துவது தவறு. தாமு ணர்ந்த தர்மத்தை—கல்வியை, சீர்திருத்தத்தை, கொள்கையை, தமது வர்த்தமானி மூலம் வெளி யிட்டு நாடு முன்னேறும் வழி தேடுவது இவர் கடனுகவேண்டும். இங்ஙனம் பிரசுரங்கள் புற்றீ சல்போன்று வெளியாய் நாடுதோறும் ஆணும், பெண்ணும், வாலிபரும் வயோதிபரும், வாசித் லுக் கண்ணுற் காணுதனவற்றை உணரவேண்டும். பிறநாடுகளில் நிகழும் திருத்தங்கள், அறிவுரை கள் வெளியாவதாற் சீர்திருத்தம் பிறப்பது உண்மை.

ஊ. கழகங்கள்: இங்கு குமுழும் மக்கள் தம் தம் கல்வியறிவை வெளியாக்குவர். தர்க் கங்கள் நிகழ்வதால் பிழையான கொள்கை கள் நீங்கி உண்மை புலனுகும். அங்கத்தவர் தமது நீதிமுறைகளைச் சீர்திருத்தத்தின் வழி யிற் செலுத்துவர்.

எ. நாடக வாயிலாலேற்படும் திருத்தம்: நாட கங்கள் ஒருவரின் நீதி மொழிகளை, அவரின் நன் நடத்தையை, அதனலாகும் பலனை, நெடுதியின் கடினவை, பிறவைப் போதிக்கும், போதனுமுறை பில் ஓர் துறை யெனக் கொண்ட நாடகம் இன்று பிழைப்பிற்கென எண்ணபபட்டு அர்த்தமிழந்து கிடக்கின்றது. கல்வியாளரால் நடக்கப்பட்ட நாடகம்—சங்கீதக் கலையை உணர்த்தும் வித் துவான்களின் உபதேச மேடை—இன்று நீர் அட்சரக் குச்சிகளால் சங்கீதக்கலை என்ன வென்பது தெரியாதவர்களால்—ஆக்கப்பட்டிருக் கின்றது. இது "கூத்தாடுவதும் குண்டி கெளிப்பதும் ஆத்தாதவன் செய்யும் செயல்" என் னும் பிதற்று மொழிக்கும் இடந்தந்து விட்டது. நாடகஸ்தரே தமது கடமையை இழந்துவிட்ட னர். அதனல் இன்று சீர்திருத்தம் முறையில் அறிவாளிகள் நடித்துப் பிழைகளைக் காண்பிக் கின்றனர். ஆகவே இன்று சிலரின் பிரயாசை யால் இரு திருத்தங்கள் நிகழ்கின்றன. ஒன்று நாடகத்தாலடையும் போதனை மற்றது நடிகர் களின் பிழையைக் களைவது.

ஏ. பிரசாரகர்: நீதி முறைகள் கல்வியாள னிடம் மிளிரும். அவனே அவன் மனச் சான்று தூங்கவிடாது. குற்றங் களையுமாறு தூண்டும். அப்போ அவன் தனது முறைகளை உலகிற்கு உணர்த்த நாடு நாடாகச் சென்று, பிரசாரிப்பன். அக்காலத்து முறைகள் இங்ஙனே உலகுய்யும் துறைகளிற் பலரும் ஈடுபட்டன. இன்று வயி ற்றுப் பிழைப்பிற்கென எண்ணப்பட்டு விட்டது. இதனல் உலகம் ஏமாற்றபபட்டதை உணராது சிலர் உண்மையெனக் கொண்டு எத்துறையையும் இழிவுபடுத்துகின்றனர். இம்மருள் மண்மாற வேண்டும். குறைகளைக் களைய வேண்டும். யாம் ஒரே சமூகமாய் முன்னேற வேண்டும்.

எமது நாட்டின் தட்ப வெப்பத்திற்கையைய, வளனுக்கையைய, உலகேற்கும் முறைகளில் யாம் சீர்திருத்தவேண்டும். வெப்ப நாட்டிற்கு கம் பளி ஆடைகளும், உடலின் சூட்டை வளர்க்கும் பானங்களையும் நீக்கப்படவேண்டும். மொழி வளர்ச்சி, தொழில் வளர்ச்சி, ஞான வளர்ச்சி, உலகியல் வளர்ச்சி' அறிவில் வளர்ச்சி உண்டாக எவ்வெத்துறைகள் வேண்டுமோ அவற்றைத் தயங்காது செயலிற் கொண்டுவர வேண்டும். அப்போ யாம் பாதை தவறவில்லை யென்பதை உணர்வோம். இதே சீர்திருத்தமாகும்.

சுபம்.

மதுபானம்

பஞ்சமா பாதகங்களுள் ஒன்றெனத் தொன்று தொட்டு கண்டனம் செய்யப்பட்டது மதுபானம். மதுபானத்தை நல்லது என்று ஒரு மதமாவது ஒப்புக்கொள்ளவில்லை. சகல மதங்களும் கட் குடியை மகா பாவமான செய்கை என்று கூறி யிருக்கின்றன. எனினும் அத்தீய வழக்கம் நம்

மக்களுக்குள் வெகு காலமாக இருந்து வருகிறது. குடி பல குடித்தனங்களைக் கெடித்து வருகிறது. அகால மரணத்துக்கு மதுபானம் ஒரு முக்கிய காரணம் என்று சொல்வது மிகையாகாது, மதுபானம் மனிதனுக்கு இயற்கையாயுள்ள புத்தியை அழித்து மகனுகவும், கணவனுகவும், தந்தையாகவும் இருந்து அவன் செய்ய வேண்டிய கடமைகளை மறக்கும்படி செய்கிறது. அதுமட்டுமின்றி அவனை வேலை செய்யத் திறமையற்றவனுக்கி, திருடவும், கொள்ளையடிக்கவும், காமாந்த பேயனுகவும் ஆக்கி தன்னை மறந்து பல விதத் தீச்செயல்களைச் செய்யுமாறு அவனைத் தூண்டுகிறது. தவிர அதை அருந்துபவர்கள் கரசம், கபம், பாரிசவாயு, பைத்தியம், முதலிய நோய்களுக்கும் ஆளாகிறார்கள்.

பொதுவாக இந்தக் குடிப் பழக்கத்தால் மிகுதியும் அல்லலுறுவோர் யார் எனறு சற்று ஆராய்வோமானுல் பெண் மக்களை என்று புலப்படும். உதாரணமாக தொழிலாளிகள் விவசாய குடும்பங்களின் நிலையை எடுத்துக் கொள்வோம். கணவன் எட்டு அல்லது பத்து அணு சம்பாதித்தால் அவன் அதில் தவருது ஆறணுவுக்குக் குடித்து விடுகிறான். அநேக நாட்களில் பூராய்க் கூலியையும் குடியில் செலவழித்து விட்டு சாயந்தரம் வீட்டிற்கு வருகின்றான். மனைவி போனவன் வருவான் வருவான், என்று கடைக்குச் சென்று பதார்த்தம் வாங்க காத்துக் கொண்டிருக்கிறாள். அவனை வந்து ஏதாவது உணவு கொள்ள வேண்டும் என்று நினைக்கிறான். வீட்டின் அடுப்பில் பூனை தூங்குகிறது. தன் அறிவை இழந்து கிடக்கும் அந்த மானிட மிருகம் மனைவியை போட்டு உதைக்கிறது! மனைவி கதறுகிறாள்! குழந்தை குஞ்சுகள் "ஐயா அம்மாவை அடிக்காதே" என்று தகப்பனைத் தடுக்கின்றன! கண் மண் தெரியாத மூரட்டுக் குடிகரன் அவைகளையும காலால் உதைத்துத் தள்ளுகிறான்! வீட்டில் ஒரே இரைச்சல்! வெளியில் வேடிக்கை பார்ச்சும் கும்பல்! இதுபோன்ற காட்சிகளை நகரங்களிலும், நாட்டுப்புரங்களிலுந் தினசரி காண்கின்றோம்.

இத்தோடு நிற்கவில்லை. மனைவி தன் கணவனின் குணத்தை அறிந்து தானும் ஏதோ கூலி வேலை செய்து அதையாவது வைத்துத் தன் குழந்தைகளையும் கட்டிய கடனுக்குக் குடிகாரக் கணவனையும் காப்பாற்றுவோம் என்று ஏதோ சில காசுகள் சம்பாதிக்கிறாள். அளவுக்கு மிஞ்சி குடிக்கு அடிமையான மானிடக் கடனுக்கு மது வருந்த தன் சம்பாத்தியம் போதவில்லை தன் மனைவியிடம் காசு கேட்கின்றான். தர மறுத்தால் தடியடி பூஜை, வசை புராணம் முதலியன நடக்கின்றன. வீடு அமர்க்களந்தான். இவ்வாறுகக் குடிப்பழக்கத்தால் அவஸ்தைப்படுவது கீழ்தர மக்கள் வீட்டுப் பெண்டிர் மட்டும் என்று நினைத்து விடவேண்டாம். நல்ல குடும்பத்து ஸ்திரீகளும் கெட்ட சகவாசத்தால் தங்கள் தந்தையரோ, சகோதரரோ, கணவன்மாரோ இந்தத் தீய வழக்கத்துக்கு ஆளானுல் மானம், மரியாதை, செல்வம் யாவற்றையும் இழந்து பரிதவிக்க நேரிடுகிறது. குடிகாரனுக்குத் தாயென்றும், மகளென்றும், மனைவி என்றும், சகோதரி யென்றும் வித்தியாசந் தெரியாது. கொஞ்சக்காலம் வேண்டுமானுல் "நிதான"மாய் இருக்கலாம் பின்னர் நிதானம் மறைந்து "தடிதானம்" தான் குடித்தனத்தில் குடிகொண்டிருக்கும்.

மேலும் ஆண்கள் இந்தப் பழக்கத்தைக் கைக் கொண்டால் நேரிடும் இன்னல்களை நாம் இது வரையில் கூறி வந்தோம். பெண்களிலும் குடிக்கிறவர்கள் இருக்கிறார்கள். நாகரீகம் முதிர்ச்சி பெற்ற பல குடும்பங்களில் இம்முறை சில இடங்களில் நாகரீகத்தின் அறிகுறியாக பழக்கத்திலிருந்து வருகிறது என்பது யாவரும் அறிந்த விஷயமே. இதனுல் நாளாவட்டத்தில் அக்குடும்பங்களின் நிலை சீர்கேடடைந்து வீழ்வதையும் நாம் கண்ணாரக் கண்டிருக்கிறோம். விவசாய தொழில் ஸ்திரீகளும் தங்கள் கணவருடன் கூடிக் குடிக்கிறார்கள் என்பதும் வாஸ்தவமே. கள்ளுக் கடைகளின் முன்னர் சற்று நின்று பார்த்தால் இந்த ஸ்திரீகள் தாங்கள் மட்டும் குடித்து மதியிழந்தால் போதாது என்று தங்கள் சிசுக்களுக்கும் இந்த விஷ பானமாகிய மதுபானத்தைத் தினித்து ஊட்டுவதைக் காணலாம். என்ன கோரக் காட்சி! நெஞ்சு துடிக்கிறதே! "மதுவாக்கனும் வீழ்வானு! நமமக்களும் இன்ப வாழ்வு நடத்துவார்களா!" என்று ஏங்கியிருந்த சமூக சீர்திருத்த வாதிகளுக்கு ஒரு நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. உலகம் போற்றும் உத்தமராகிய மகாத்மா காந்தியடிகள் நாட்டில் மதுபானத்தை அடியோடு ஒழிக்க வேண்டுமென்று சங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்.

ஆகையால் பெண்கள் ஒவ்வொருவரும் இந்தப் புனிதச் செய்கையில் ஈடுபட வேண்டியது அத்தியாவசியம் என்று வற்புறுத்திக் கூறவேண்டியதில்லை. இந்த மது விலக்குத் திட்டம் வெற்றிபெற வேண்டுமானுல் அது பெண்களின் பரிபூரண ஆதரவும், ஒத்துழைப்பும் இருந்தால்தான் முடியும். படித்த ஸ்திரீகள் இன்று முதலே தங்களுக்கு அவகாசம் கிடைக்கும் போதெல்லாம் தங்களைச் சுற்றியுள்ள வீடுகளுக்குச் சென்று பெண்களிடத்தில் குடியால் விளையும் கேடுகளைப்

பற்றி மனதிற் பதிலும்படி சொல்லவேண்டும். சும்மா சாயங்காலம் போய் பாக்கு வெற்றிலை, மேசை நாற்காலிகளுடனும் பத்துப்பேர் கூச்ச லிட்டுப் பேசி வருவதால் மட்டும் பலன் கிடைக் காது. தொடர்ந்து அவர்களுடன் அன்பாய்ப் பேசிப் பழகி அவர்களின் மனதை மாற்றி வர வேண்டும் வீடு வீடாகச் சென்று தங்கி சரியான வேலை செய்து உருவான திட்டங்கள் அமைக்க வேண்டும். ஆடவர் அப்பழக்கத்தை விட்டு நன் மக்களாக மாறும்படி செய்து குடும்பங்களின் பொருளாதார நிலையை உயர்த்தி, அதன்மேல் இதரத் துறைகளிலும் குடும்பங்கள் உயர்வடை யச் செய்யவேண்டியது நம்து ஸ்திரீகளாலேயே முடியும். சட்டமும் போலீசும் எல்லாவற்றையும் செய்துவிட முடியாது. எனவே ஸ்திரீகள் முன் னேற்றத்திற்காக உழைக்கும் ஸ்திரீகள் எல்லோ ரும் மது விலக்கு விஷயத்திலும் பூரண கவனம் செலுத்தி வேலை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

க. சுப்பிரமணியம்.

* கடிதம் — விகடம் *

ஆதியிலே ரயிலை செஞ்சி ஓடவுட்ட வெள்ளைக் கார சார்சு ஷ்டீபின்சன் (George Stephenson) தொறை அவுங்களுக்கு கும்பிடுரங்க இல்லிங்க குட்டுமார்னிங்க.

ரொம்ப வருசத்துக்கு மின்னால ரயிலை மொத லல்ல செஞ்சவங்க நீங்கதானின்னு சொல்லிகிறாங் களேசாமி அது நெசந்தாங்களா? அவ்வளவு பெ ரியரயிலை எப்படி சாமி செஞ்சிங்களோ? அது ஓடரத்துக்கு என்ன வெசை வைச்சிறீங்களோ? அப்படி கஷ்டப்பட்டு நீங்க கண்டு பிடிச்சதை இந்த காலத்தில் எத்தினையோ கம்பனிகாரரு ஏற் பட்டு ரயிலை செஞ்சி செஞ்சி இந்த ஒலகமெல் லாம் ஓடவுட்டுடாங்க. எல்லாம் இந்த சனங்க ளுக்கு நல்லதுதான் செஞ்சிராங்க இருந்தாலுங் கூட எனக்கு இன்னொன்று தாங்க கொறை; இப்பதரையிலை ஓடர மொட்டகார மாதிரி ரயிலு செஞ்சி சந்து சந்தா ஓ — உடலேய இங்கிறது தாறுங்க.

ஆமாங்க! இன்னொன்னு மறந்தேபூட்டங்க. நீங்க இப்ப இந்த ஒலகத்திலே இல்லியாமே! அ ந்த ஒலகத்துக்கு பூட்டிங்க இன்னு அல்லாரும் சொல்லி கிறாங்களே அது ஏன்? அவ்கே போயி இந்தமாதிரி ரெயிலு அங்கேயும் செஞ்சு உடுறத் துக்கு எடம்பாக்கப் போனிங்களா? ரொம், ரொ ம்ப சந்தோசங்க. அந்த ஒலகத்துக்கும் இந்த ஒலகத்துக்கும் ரயிலு போட்டுட்டா நல்லதுங்க. எங்கபாட்டன் பாட்டி, இன்னும் ரொம்ப சொந்த காருவங்களும் இன்னும் எனக்கு மின்னால இரு ந்தவங்கல்லாம் அந்த ஒலகத்தில்தான் இருக்கிறாங் களாம் அவுங்களை பாக்க என் கண்ணிலேயே நிக்கி ங்க அப்படி நீங்கமாத்திரம் ரயிலுபோட்டிட்டா அதுபேலேயேபோயி அவுங்கல்லாரையும் பாத்து ட்டு வருவாங்க அங்கே இக்கிற வங்களும் இங்கே அடிக்கடி வருவாங்க. அப்ப இந்த ஒலகத்துக்கும் அந்த ஒலகத்துக்கும் சம்பந்தம் ஏற்படுங்க. எம னுங்கூட அவர் வாகனத்தை தேடவேண்டிய வேலை யே இல்லிங்க. கஷ்டமில்லாதை ரயில்லியே வந்து ட்டு போவாரு. இந்த ஒலகத்துச் சனங்களும் அங்கவர்ரத்துக்கு ஆசப்பட்டுக்கிட்டு இக்கிறாங்க. நீங்க ரயிலு போட்டாதை இருந்தா எனக்கு மின் னாலே தெரியவச் சிடுங்க; ஆளைசார்சு மாத்தரம் கொறைச்சி போடுங்க ஒங்களுக்கு நான் சங்கதி சொல்ல வேண்டியதில்லை. நெனப்பிருக்கட்டும் மறந்து பூடாதிங்க.

இந்த கடதாசியை ஒங்களுக்கு அனுப்ப எனக்கு வெலாசந் தெரியலிங்க. அதனாலே நம்ப வழி காட்டி எங்கிற வர் ஒவ்வொரு மாசமும் இந்த ஒலக மெல்லாம் சுத்தி கிட்டு நீங்க இர்கிற எடத்துக்குங்கூட வரப் போறதாக கேள்விப் பட் டங்க. அவரு கிட்டகுடுத் தனுப்பிஞ்சா ஒங்க ளுக்கு பத்திரமாய் போய் சேருமின்னு நெனச்சி குடுத்தனுப்பி கிரங்க. நீங்வவங்கி படிச்சு பாத்தி ட்டு பதிலு எயுதுங்க. இதுல் ஏதாச்சும் குத்தங் கொறை இருந்தாலுங்கூட பொறுத்துகுங்கசாமி. மத்த விசயம் நான் அங்கே வந்தா பேசிக் கொள் ளறங்க.

இப்படிக்கு,
இந்த ஒலகமனிசன்,
நான் தான்.
எஸ். டி.. பிள்ளை.

ஓம்

முகமயம்

முருகன் அடியவர்க்கு அறிவித்தல்.

கதிர்காம க்ஷேத்திரத்தைத் தரிசிக்கவரும் யாத்திரைவாசிகளில் பத்து இருபது பேர்வரையில் கதிரைமலையைத் தரிசிக்கக் காட்டுமார்க்கமாகப் போய்ச் சிலர் செத்தார்கள்; சிலர் காட்டில் அலைந்து திரிந்து நாலைந்து நாட்களின் பின் தரிசித்து வந்தார்கள் என்பதை நான் கேள்விப்பட்டேன். நீங்களும் கேள்விப்பட்டிருப்பீர்கள். இதைவிட எனக்கும் தெரியக்கூடியதாக அனேகர் காட்டில் அந்தரித்துக் காணப்படாமலும் போகிறார்கள்.

இதை அறிந்த நாள் தொடக்கம் நான் மாணிக்ககங்கைக் கரையிலிருந்து கதிரைமலைச் சிகரம் வரையும் ஒரு தெரு வெட்டவேண்டுமென்று எம்பெருமானிடம் 13 வருடகாலமாக வேண்டுதல் செய்தேன். 1927-ம் ஆண்டு பெருமான் விடையளித்தார். பின்னர் வதுளை கவர்ன்மென்ற் ஏஜன்ற் திரு. E. T. மிலிங்டன் அவர்களுடைய உத்தரவையும் பெற்று, அன்றுதொடக்கம் வெட்டித் திருத்தப்பட்ட தெருவில் ஏராளமான யாத்திரைவாசிகள் கதிரைமலைக்குச் சென்று தரிசிக்கிறார்கள். இவர்கள் தாகத்தினால் வருந்துகிறதைக் கண்டு அவ்வருடமே அம்மலைச்சிகரத்தில் விளையாட்டாய் ஒரு தண்ணீர்ப்பந்தலையும் தொடங்கினேன். திருத்திய புதுப்பாதை மாணிக்ககங்கையிலிருந்து தண்ணீர்பந்தல்வரை இரண்டுமைல் தூரம். அவ்வருடம் தண்ணீர்ப்பந்தலுக்குத் தண்ணீர் கொண்டுவருகிற சுமைகூலியே இரண்டாயிரம் மூவாயிரம் ரூபாய்க்கு மேல் வந்துவிட்டது வருஷாவருஷம் செலவு கூடிக்கொண்டே வருகிறது. இச் செலவைச் சுருக்குவதற்காகப் பொருட்டு 1935-ம் ஆண்டில் தண்ணீர்ப்பந்தலுக்குச் சமீபமாகத் தெருவருகில் 75 அடி நீளமும் 75 அடி அகலமும் 20 அடி ஆழமும் உள்ள ஓர் திருக்குளத்தை வெட்டத்தொடங்கினேன். சென்ற மூன்று வருடமாக இலங்கையில் சில பகுதிகளிலும், யாழ்ப்பாண நாட்டிலும் யாசித்துத் திருக்குளவேலையைச் செய்துவருகிறேன். இதுவரை ரூபாய் 750 செலவாய்விட்டது. ஆனால் இன்னும் முடியவேண்டிய வேலை கூடியபங்காயிருக்கிறது. இதை முடிக்கிறதற்கு இன்னும் 1500 ரூபாய் தேவை. இந்த ரூபா 1500ம் வருகிற மாசிக்கு முன்னர் என்னிடம் சேர்ந்துவிட்டால் வருகிற ஆடி உற்சவத்திற்கு வரும் யாத்திரைவாசிகள் அத்திருக்குளத்தில் தாகசாந்தி செய்வார்களென்பதைத் திடப்படுத்துகிறேன். அனேகர் அதர்மமான விஷயங்களில் அதிக பணத்தை எறிந்துவிடுகிறார்கள். ஆனால் அதர்மமில்லாததும் நீடுழிகாலம் நிலைக்கக்கூடியதுமான இத்தருமவிஷயத்திற்கு நீங்கள் பண உதவி தரவேண்டுமென்று முருகக்கடவுளிடம் பழிகிடக்கிறேன்.

ரமண-சங்குசாது, கதிரைமலை,
தபாலாபீஸ போஸ்ட். (இலங்கை.)

ஓம்

விவேகானந்த ஆச்சிரமம்

கோலாலம்பூர்.

இந்துசமய பாடப் பரீட்சை—1938

இந்து சமய அபிவிருத்தியின் பொருட்டு கோலாலம்பூர் விவேகானந்த ஆச்சிரம ஆதரவின் கீழ் இந்துசமய பாட நிர்வாக சபையாரால் நிகழும் வெகுதானிய—ஹேவிளம்பி மார்கழி-மீ 10-ஆ ஞாயிற்றுக்கிழமை (25-12-38) காலை 8.30 மணிக்கு இந்துசமய பாடப் பரீட்சை நடத்தப்படும்.

இப்பரீட்சை இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது

(1) கீழ்ப்பிரிவு:—தமிழ் நாலாம் வகுப்புக்குக் கீழ்ப்படிக்கும் பிள்ளைகளுக்கேயுரியது.

(2) மேற்பிரிவு:—தமிழ் நாலாம் வகுப்பு முதல்

மேல்வகுப்புகளில் படிக்கும் 20-வயதுக்குள்பட்ட பிள்ளைகளுக்கே உரியது.

இப்பரீட்சைக்குரிய சமய பாடங்களாவன.—

கீழ்ப்பிரிவு:— 1. முதலாம் சைவ விளக்கம்.
2. முதலாம் சைவ போதம்.
3. தேவார திருவாசகங்கள் முதலியன.

மேற்பிரிவு:— 1. இரண்டாம் சைவ விளக்கம்
2. இரண்டாம் சைவ போதம்
3. நான்காம் பால பாடம் (நாவலர்)
4. பெரிய புராண வசனம் (நாவலர்)
5. இந்து சமய பாட நிர்வாக சபையாரால் வெளியிடப் பட்ட கேள்விகள்.
6. தேவார திருவாசகங்கள் முதலியன.

இப்பரீட்சையின் ஒவ்வொரு பிரிவுகளிலும் சித்தியடையும் முதல் இருபத்தைந்து பிள்ளைகளுக்கு, சுவாமி விவேகானந்தருடைய ஜனன தினக் கொண்டாட்டத்தின்று பரிசு வழங்கப் படும். இப்பரீட்சையில் எல்லா இந்துப்பிள்ளைகளும் சேரலாம். இப்பரீட்சையில் சேர விரும்பும் மாணவ மாணவிகள் தங்கள் முழுப்பெயரையும், விலாசத்தையும் டிசம்பர்-மீ 1-ம் திகதிக்கு முன் இந்து சமய பாட நிர்வாக சபைக்காரியதரிசிக்கு அனுப்ப வேண்டும்.

இம்மலாய் நாட்டிலுள்ள இந்துசமய பாடசாலைகளின் அதிபர்கள் தங்கள் வித்தியாசாலைகளின் மாணவ மாணவிகளும் ஏனையோரும் இப் பரீட்சையில் சேர்வதற்குச் சமய பாடங்களை அவ்வவ்விடங்களில் ஆரம்பித்து இந் நன்முயற்சியை அனுகூலமடையச் செய்வார்களாக.

இங்ஙனம்,
த. சபாரத்தினம்,
கௌரவ காரியதரிசி.

விவேகானந்த ஆச்சிரமம்,
கோலாலம்பூர்,
16.2.1938.